தென்மொழி

விடுதலை பிறக்கும்!

வடவர்க்கும் பார்ப்பனர்க்தும் வால்பிடித்தே
வாழுகின்ற நிலையைப் பெற்றே
படநிற்கும் நெடுமரம்போல் பாயிழந்த
மரக்கலம்போல் பற்றி ழந்தே
கெடநிற்கும் தமிழா, உன் கீழ்மையினை
இன்றுணர்ந்து கிளர்வா யானால்
தொடநிற்கும் பெருந்துயரும் தூளாகும்
விடுதலையும் தோன்றும் அன்றே!

சுவடி : 7 ஓலை - 4. விடை தி. பி. 2000.

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

www.thamizham.net - Free E book No 7416

நமக்கு வந்த மடல்கள்.

(பகை எனக்கு விழிப்பூட்டுகின்றது. வசைகள் என்னை உறுதியாக்குகின்றன. பொய்ச் செய்திகள் பாதையில் உள்ள பள்ளம் படுகுழிகளை எனக்கு எச்சரிக்கின்றன. நேர்மை எனக்கு வழிகாட்டுகின்றது. உண்மை எனக்குத் துணை வருகின்றது. கடமை என்னை வழிநடத்துகின்றது. நட்பு என் அயர்வைப் போக்குகின்றது. தமிழ் எனக்கு ஒளி தருகின்றது. தாயகம் என்னை எதிர்நோக்குகின்றது. இறையுணர்வு எனக்கு நம்பிக்கை யூட்டுகின்றது. என் வாழ்க்கைக்குப் பின் உள்ள எச்சமே நான் யார் என்பதை உலகுக்கு உணர்த்தும். வெறும் வாய்கள் மனத்தை எடைபோடா. — பெருஞ்சித்திரன்.)

O எத்தர்கள் தென்னவர் என்றெண்ணும் வஞ்சகப்
பித்தர்கள் வாரியும் பூரியும் - மொத்தத்தில்
செத்திடக் குத்தீட்டி தீட்டிய தென்மொழிச்
சித்திரனுர் வாழ்க சிறந்து.

ஞா. செயராசு. எழுமலை - மதுரை.

O வண்டமிழ் வயவ! தங்களது ஆசிரிய உரையான "வாரியும் பூரியும்" மிகவும் தெளிவுற இருந்தது. தீண்டாமையைப்பற்றி வெளியொன்று கூறி உள்ளொன்று நினைத்தும் போலியருக்கும் பொய்யருக்கும் இன்னும் ஒரு சில கூறியிருக்கலாம். நம் நாட்டின் குடியரசுத் தலைவராகக் கீழ் வகுப்பைச்சேர்ந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்து வாரிக்கும் பூரிக்கும் மூக்குடையச் செய்யவேண்டும்.

— சுப. தென்னவன், கீழச்சிவல்பட்டி.

O பெரும்! தங்களது மேழம் தி. பி. 2000 தென்மொழியின் ஆசிரியவுரை படித்து ஓர்வோர உள்ளமெல்லாம் குமுறுகின்றது. தாங்கள் இனம் என்ற ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு, ஆரியரை, அவர் தம் இனத்தையே இகழுக்கிதழ், பக்கத்துக்குப் பக்கம், வரிக்கு வரி, ஏன்? சொல்லுக்குச் சொல்லாய்த் தாக்கிச் சாடி இடித்து வந்ததைக் கருதி ஓரளவு மனம் கவன்றேன். ஏனெனில், தமிழக் குமுகாய வளர்ச்சியே தம் பெருநோக்காகக் கொண்டுள்ள ஓரும் தமிழ்ப் பெருந்தகை, தமது வழியிற் பிறழ்கின்றுரோ என்ற ஐயமே. ஆயின் அது தவறான கருத்து என்பது இம்மேழ இதழைக் கண்ட பின்பே புலனுயது. ஆரியர் தம் அரவு கலந்த நச்சு மனத்தை, தமிழர் தாழ, தமிழ்க் குமுகாயம் வீழவேண்டிச் செய்த சூழ்ச்சிகளை, மாய்ந்த தாழ்ந்த தமிழ் உள்ளங்கள் தெள்ளத் தெளிவாக அறியச் செய்துள்ளீர்கள். உள்ளத்தையே உருக்கும் தங்கள் "வாரியாரும் பூரியாரும்" என்ற ஆசிரியவுரையினைப் படித்தவன் உள்ளம் தமிழ் விடுதலைக்குக் கட்டாயமாக முகிழ்த்தெழும். ஐய! அறுதியிட்டுக் கூறுவதெனில் தங்களது மேழ ஆசிரியவுரையினைத் தமிழகத்துப் பிறந்த, தமிழைத் தாய்மொழியாகக்கொண்ட, உள்ளுணர்வுள்ள ஓர் ஆரியனே கண்ணுறின் அவன் வெட்கித் தலைகுனிந்து, தம் முன்னேரின் பிழைகளை எண்ணி உள்ளம் குமுறுவது திண்ணம்.

—சேயிளங்கண்ணன். அமரபூண்டி, பழனி

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம்)

www.thamizham.net - Free E book No 7416

தென்மொழி

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி-7: ஓலை-4

விடை தி. பி. ௨௦௦௦ (1969-மே-சூன்)
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

தி. பி. 2000-ஆண்டு நினைவுக் குறிப்புகள்!

திருவள்ளுவர் பிறந்து ஏறத்தாழ ஈராயிரமாண்டுகள் கழிந்தன. இவ்வுலகமும் அதையுள்ளிட்ட இத்தமிழகமும் எத்தனையோ மாறுதல்கள் எய்திவிட்டன. புறநிலையில்-வெளிப்படையாக எத்தனை எத்தனை முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன! இருண்டிருந்த இவ்வுலகத்தை ஒளியுள்ளதாக மாற்றியது எவ்வளவு பெரிய முன்னேற்றம்! நடந்தே சென்று கொண்டிருந்தவன் போக்கில்தான் எத்துணை மாறுதல்! ஊர்தியென்ன; இயங்கியென்ன; தற்காலப் புதிய கருவிக் கலங்கள் எத்தனை! எத்தனை!! மாந்தன் கண்டுபிடித்த நுண்ணிய கருவிகளும், எண்ணிலா அறிவியலமைப்புகளும் இவ்வுலகை அடியோடு மாற்றியுள்ளன. கோளுக்குக் கோள் தொடர்பு கொள்ளுவதுவரை இவன் தன் அறி

www.thamizham.net - Free E book No 7416

வால் சமைத்துக்கொண்ட புதுமைகளுக்கும் முன்னேற்றங்களுக்கும் ஓர் அளவே இல்லை. உணவில், உடையில், உறையுளில்...! அப்பப்பா! ஓர் ஊசியைச் செய்வதில்கூட மிகக் கவனத்தையும் அறிவையும் செல விட்டிருக்கிறான். இவ்வாறு மாந்தனுடைய அறிவியல் முன்னேற்றம் இவனை இப்புடவியிலேயே—இவ்வகண்ட—ஒளியும் இருளும் கரைந்து பாயும் வானவெளியிலேயே ஒரு தனிமைச் சிறப்புள்ளவனாக ஆக்கியுள்ளது. இவற்றை நினைக்கையில் என் பெருமிதத்திற்கு எல்லையே இல்லை. என் எண்ணம் மேலும் மேலும் விரிந்துகொண்டே போனது.

திருவள்ளுவரை நினைத்தேன். அவரோடு இருந்த கற்பனை மாந்தர்களையும் நினைத்தேன். அவர் காலத்தில் வாழ்ந்திருந்த தமிழகத்தாரையும், சிந்துவெளி மாந்தரையும், பழைய சுமேரியரையும். எகுபதியரையும், கிரேக்கரையும் என் எண்ணக் கயிற்றால் கட்டி அறிவு விளக்கால் அடையாளங்கண்டு பிடித்தேன்... அவர்கள் அத்தனைப் பெயர் அறிவிலும் கற்பனையிலும் பட்டிராத அளவுக்கு இவ்வுலகம் அடைந்துள்ள மாறுதல்களை எண்ணி எண்ணி இறுமாந்தேன். எனக்கு வியப்பு பிடிபடவில்லை. நான் என்னை இழந்தேன்.

திருவள்ளுவரின் ஓலைச்சுவடிக்கும் இப்பொழுது புழக்கத்தில் உள்ள வழவழப்புத் தாளுக்கும் இடையில் இரண்டாயிரம் ஆண்டுகள் ஓடி மறைந்தன. புறநிலையில் மாந்தன் பெற்றுள்ள முன்னேற்றம் போலவே அகநிலையிலும் இவன் முன்னேற்றம் கண்டுள்ளானா என ஒரு நொடி எண்ணினேன். என் எண்ணங்கள்—பெருமிதங்கள்—வியப்பு யாவும் நிலைகுலைந்து தலைகுப்புற விழுந்தன. திருவள்ளுவரின் ஓலைச்சுவடி மாய்ந்து போனது உண்மைதான். ஓலைச்சுவடிக்கு இன்று வேலையில்லை; எனவே அது தேவையில்லை என்பதுவும் உண்மைதான்! ஆனால் அந்த ஓலைச்சுவடியில் எழுதப்பெற்றிருந்த கருத்துகள், வழவழப்புத்தாளுக்கு மாறியுள்ள பின்னும், அவற்றிற்குத் தேவை இருக்கின்றது; அவற்றின் வேலையும் எஞ்சியிருக்கின்றது. சிந்துவெளி மாந்தரும் பழைய கிரேக்கரும் உரோமரும் சுமேரியரும் மாய்ந்து போனது உண்மைதான்; ஆனால் அவர்களின் எண்ணங்கள், எழுச்சிகள், சூழ்ச்சிகள், நன்மை தீமைகள் யாவும் மாய்ந்துவிட்டன என்று சொல்ல முடியுமா? அவர்கள் அன்று பயன்படுத்திய கருவிகள் யாவும் இன்று புதுப்பிக்கப்பட்டுள்ளன. ஆனால் அன்று அவர்க்கிருந்த எண்ணங்களில் இன்றுள்ள மாந்தனால் புதுப்பிக்கப்பெற்ற எண்ணங்கள் எத்தனையாக இருக்கலாம் என்று எண்ணிப் பார்த்தேன். என் வியப்பு இருந்த இடம் தெரியவில்லை.

மாந்தனின் விருப்பு வெறுப்பு உணர்ச்சிகள் என்றுமே மாறுவதில்லையா? அவன் அகவுறுப்புக்கு இளமையோ வாலைப்பருவமோ, மூப்போ இல்லையா? என் எண்ணக்கொடி பல்லாயிரம் அறிவுச் சிம்பு

www.thamizham.net - Free E book No 7416

களிலும் கொம்புகளிலும் பற்றிப் படர்ந்து கொண்டிருந்தது. எண்ணங்களைப் பொறுத்தவரையில்–உள்ளங்களைப் பொறுத்த அளவில் அவை மேல்நோக்கி வளர்ச்சியடைவதாக என்றால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அவற்றின் வளர்ச்சி கீழ்நோக்கி அமைந்ததாகவே என் நினைவிற்குப் பட்டது. அதனால்தான் குறள் எழுதியிருந்த ஓலைச்சுவடிகள் அகற்றப் பெற்ற பின்னும் குறள் வாசகங்கள் அகற்றப்பெறாமல் காத்து வைக்கப் பெறுகின்றன. அவ்வாறுதால் இதுவரை காக்கப் பெற்றுள்ள எந்த நூலுக்கும் இனி அழிவில்லை. ஏனெனில் மாந்தனுக்கு அவற்றில் எதுவுமே இன்னும் வேண்டாததாகி விடவில்லை. திருக்குறளும், பைபிளும், குர்-ஆனும், மேலும் மேலும் மக்களுக்குத் துணையாக இருந்து கொண்டுதான் இருக்கும். "என் சொற்கள் என்றும் அழிந்துபோவதில்லை" என்று பைபிளில் ஒரு நல்லுரை உண்டு. ஆமாம்; மாந்தனின் உண்மையான எண்ணங்கள், அவற்றின் மேடு பள்ளங்கள் என்றும் அழிந்து போவதில்லைதான். எளிய மாந்தரின் எண்ணங்கள் போலன்றி வலிய மாந்தனின் எண்ணங்கள் இவ்வுலகையே வலம் வந்துகொண்டு தான் உள்ளன. ஆனால் அவை செயலற்று இயங்குகின்றன.

மீண்டும் சில அடிப்படை உணர்வுகளை ஆழ நினைத்தேன். அவற்றை முற்காலத் தற்காலச் சூழல்களொடு பொருத்தி எடையிட்டேன். எனக்குத் தோன்றிய கருத்துச் சுவடுகள் ஏராளம். பொது மாந்த முன்னேற்றம், தனிமாந்த முன்னேற்றம், அறிவால் வகைப்படுத்தப் பெற்ற தனித் தனித் துறையிலும் இவன் கண்ட முன்னேற்றங்கள்–இவை யாவும் என் அறிவுப் பசிக்குத் தீனியாயின. உலகம் பொதுவாக முன்னேறியுள்ள தென்பது உண்மைதான். ஆனால் எந்தத் தனிப்பட்ட ஒருவனும் முன்னேறிவிட்டதாகச் சொல்ல முடியாது. –உலகத்தின் மேடுபள்ளங்களைப் போலவே முன்னேற்றங்களும் மேடுபள்ளங்களாகவே உள்ளன.–ஒரு துறையில் முன்னேற்றம். ஒருதுறையில் பள்ளம். ஒருதுறையில் வயல். ஒருதுறையில் புழுதி. எந்த ஒரு நூலின் எந்த ஒரு வரியும் மாந்தனைத் தன்வயப்படுத்தவில்லை. சமயநூற்களும் வாழ்வியல் நூல்களும் படிக்கப் பெறுகின்றன. அவற்றில் என்னென்ன சொல்லப்பெறுகின்றன. என்னென்ன சொல்லப் பெறவில்லை என ஆய்வு செய்யப் பெறுகின்றன. ஆனால் அவை பின்பற்றப் படுவதில்லை. பைபிளில் உள்ள மலைப் பொழிவு கிறித்துவனால் மட்டுமன்றி எல்லாச் சமயத்தாராலும்பாராட்டியுரைக்கப் பெறுகின்றது. ஆனால் அஃது எந்த ஒரு கிறித்துவனாலும் பின்பற்றப்படுவதில்லை. குர்-ஆனும் பலவகையாக ஒருநாளில் பலமுறைகள் இசுலாமியர்களால் ஓதப் பெறுகின்றது. அதிற் கூறப்பெற்றவை மதிக்கப் பெறும் அளவிற்குக் கைக்கொள்ளப்பெறுவதில்லை. கீதை புகட்டும் நெறிமுறைகளையும், ஓக ஒழுக்கங்களையும் கடைப்பிடிப்பவர் யார்? திருக்குறள் எத்தனைத் தமிழர்களால் பின்பற்றப்படுகின்றது?

www.thamizham.net - Free E book No 7416

அதில் கூறப்பெற்றுள்ள ஒரு குறளை நான் வாழ்வு முழுமையும் கடைப் பிடித்தேன் என்று கூற எவனுக்காகிலும் துணிவு இருக்குமா? புத்தரைப் படிமங்களாக்கி நம் மனைகளில் வைத்து அழகு படுத்துவதைவிட அவர் வாழ்வால் நாம்பெற்ற பயன்கள் எவை? அவர்கொள்கைகள் பின்பற்றப் பெறுவது கிடக்கட்டும். அவை முழுவதும் ஒருவராலாகிலும் படிக்கப்பெற் றிருக்குமா? மாந்தன் தன் தேவைக்கேற்ற அளவில்கூட எந்த ஒரு முன் னோடியின் கடைப்பிடிப்புகளையும் பின்பற்றுவதாக உணர முடிவதில்லை.

சட்டங்கள் இல்லையானால் அறநூல்களும் சமயவொழுக்கங்களும் செல்லாக் காசுகளே! தண்டனைகள் இல்லையானால் பண்பாடுகள், நாக ரிகங்கள் என்பதாக ஒன்றும் இருக்கப் போவதில்லை. ஒவ்வொரு தலை முறையிலும் இவ்வுலகம் ஒவ்வொரு புதிய மாந்தக்கூட்டத்தைப் படைத் துக் கொள்கின்றது. ஒவ்வொரு படைப்பிலும் முந்திய கூட்டமே பிந்திய கூட்டத்தினும் வலிவு மிக்கதாகவும், அறிவு மிக்கதாகவும் இருந்து வந் துள்ளதே யன்றி பிந்திய கூட்டம் அவற்றை வென்று வாகைசூடி வரு கின்றது என்று கூற முடியவில்லை, தனிப்பட்ட ஒருவனின் அறிவு எல் லாரின் அறிவாகக் கருதப் பெறுகின்றதே யொழிய எந்த மாந்த இன மும் தனிப்பட்ட ஒருவனைச் செப்பமுடையனாக ஆக்கிவிட முடியவில்லை.

அரசுகள் விரிவடைகின்றன; ஆனால் அரசியலமைப்பு போலித்தன மும் பொய்மையும் நிறைந்த குதிரைப் பந்தய ஆட்டம்போல் ஒரு வகை யான மாந்தவெறியைத் தூண்டிக்கொண்டுள்ளது. கோயில்களின் பெருக்கமும் வண்ண விளக்கமும் சமயப் பொத்தகங்களின் கனமான கட்டடம் போலவும் கவர்ச்சி மிக்க வெளியீடுகள் போலவும் மாந்தரைப் பெருமையுறச் செய்கின்றன. எனினும் அவற்றால் விளையும் பயன் இத் துணை மடங்கு கூடியுள்ளது என்று எவரேனும் துணிந்துகூற முடியுமா? அறிஞர் ஒருவர் குறிப்பிடுவது போல், "முற்காலத்தில் குறுக்கம் (சிலுவை) மரமாக இருந்தது; மக்கள் உள்ளம் பொன்னாக இருந்தது. தற்காலத்திலோ குறுக்கம் பொன்னாக உள்ளது, மக்கள் உள்ளம் மர மாக உள்ளது". சமய குரவர்களின் வெள்ளைக் குப்பாயங்களில் ஒரு வகை மாற்றமும் ஏற்பட்டு விடவில்லை. ஆனால் அவற்றிற்குள் புதையுண் டிருக்கும் ஓர் ஆள் வெளியில் உள்ள பொதுவான மாந்தனைப் போலத் தான்—எந்தவகைப் பெருமையும் இன்றி இருக்கின்றான்.

நூலகங்கள் கோயில்களைப் போல் உள்ளன. அறிஞர்கள் சமய குரவர்களைப்போல் பாராட்டப் பெறுகின்றனர். ஆனால் அறவுரைகளை வைத்துப் புதைத்துக் கொண்டுள்ள நூல்களைப் போலவே அறிஞரும் அறிவைப் புதைத்துக் கொண்டு கிடக்கின்றனர். பேராசிரியர் ஒருவரின் மூளை வளர்ச்சிக் கேற்ப அவர் வாழ்வியல் அமைப்பு வளர்ந்துள்ளதா கத் தெரியவில்லை. படிக்கப் பெறாத நூல்களின் பயனற்ற தன்மை

www.thamizham.net - Free E book No 7416

போலவே அவர்தம் மூளையால் யார்க்கும் பயனில்லை. அவர் சொற்பொழிவுகள் மிடுக்காகவும் எடுப்பாகவும் உள்ளதைப்போல் அவர் மனம், எவ்வகை மிடுக்கோ எடுப்போ கொண்டு விளங்கவில்லை. அவரின் தனிப்பட்ட மனைவி மக்கள் பொது மாந்த வாழ்க்கையினின்று சிறிதும் உயர்ந்து மேம்பாடு கொண்டவர்களாகத் தெரியவில்லை.

சொற்பொழிவாளர் தம் உரத்த குரல்கள் அவர்களின் மனக் குரல்களை ஒடுக்கிவிட்டன. அவர்தம் இலக்கிய விளக்கங்கள் அவர் மனத்தின் இருளை விலக்கி விட்டதாக உணரமுடியவில்லை. போலித்தனம் பெருமையுற்று விளங்குகிறது. சொற்களைக் கைப்பிடித்துக்கொண்டு மனம் நடையிடவேண்டியுள்ளது. பொய்ம்மைகள் புனைவு செய்யப் பெற்ற ஊர்திகளில் உலா வருகின்றன. ஒருவரை ஒருவர் ஏமாற்றி வாழ்வது சிறந்த உலகியலறிவாகக் கொள்ளப் பெறுகின்றது. நாய் விற்ற காசு குரைக்குமா? நெய்விற்ற காசு மணக்குமா? என்ற பழமொழிகள் பொருளற்ற மொழிகளாகப் போய்விட்டன. இக்காலத்தில், நாய்விற்ற காசு குரைக்கிறது; நெய்விற்ற காசு மணக்கிறது. காசு எந்த உருவில் வந்தாலும் எந்த வழியில் நுழைந்தாலும் ஒருவனை எல்லாவகைப் பெருமைக்கும் ஆளாக்கி விடுகின்றது.

கற்புத்தன்மையைக் காப்பாற்றிக் கொள்ளக் கற்பை இழக்க வேண்டியுள்ளது. அறத்தைச் சொல்ல மறத்தைச் செய்யவேண்டி உள்ளது. பொய்யை விலைபோக்கி மெய்யைக் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. ஒழுக்கத்தை இழந்து ஒழுக்கமாக வாழவேண்டியுள்ளது. திருட்டைச் செய்து திருக்குறளை அச்சிட வேண்டியுள்ளது. பலரை ஏமாற்றிச் சிலர்க்கு ஈயவேண்டியுள்ளது.

அறநூல்களில் சொல்லப் பெற்றவை காதறுந்த ஊசிக்கும் பயனற்றவையாகப் போய்விட்டன. திருக்குறள் முழுதும் படித்த ஒருவர் சோற்றுக்குத் திண்டாடித் திகைக்க வேண்டியுள்ளது. ஒன்றிரண்டு குறளைக்கற்ற ஒருவர் பேரறிஞர் என்று புகழ்ப்பெறுவதைக்கண்டு மனம் புழுங்கவேண்டியுள்ளது. அரசியல் மூளைகள் அறிவியல் மூளைகளை ஆட்டிப் படைக்கின்றன.

அரசியல் போலித்தனங்களுக்கோ அளவே இல்லை. அரசியல் வெற்றி என்பது பொய்ம்மையின் வெற்றியாகவே உள்ளது. மக்களுக்காக அரசியல் என்பது போய், அரசியலுக்காக மக்கள் என்னும் நிலை உருவாகிவிட்டது. பலரைக் கீழே தள்ளினால் ஒழிய ஒருவன் அரசியல் நாற்காலியில் அமர்தல் இயலவே இயலாது. ஆயிரம் பொய் சொல்லியேனும் ஒரு திருமணத்தைச் செய் என்பது பழமொழி. ஆயிரம் பொய் சொல்லியேனும் அரசியல் செய் என்பது புதுமொழி.

www.thamizham.net - Free E book No 7416

அறவியலில் மணவாழ்க்கை என்பதோர் அதிகாரம் கூறப்பெறுகின்றது. இவ்வதிகாரம் பொருளியலில் மானத்திற்குப்பின்னும் பெருமைக்கு முன்னும் வைக்கப்பட வேண்டுவதாயிற்று. இன்பவியலிற் கூறப்பெறும் செய்திகள் யாவுமே எல்லாரும் கட்டாயம் கடைப்பிடிக்கவேண்டுவதான அறவியல் செய்திகள் போல் மதிப்புப் பெற்று வருகின்றன. கணவன் மனைவியர் வாழ்க்கை காலத்திற் கொவ்வாக் கற்பனை வாழ்க்கை என்று கருதப் பெற்று வருகின்றது. வருங்காலத்தில் இது கருத்திற்கும் ஒவ்வாதது என்று தள்ளப் பெறலாம். கணவன் என்ற சொல் பெருமைகுன்றி வருகின்றது. மனைவி என்னுஞ் சொல் பொருள் குறைந்து வருகின்றது. வாழ்க்கை ஒவ்வொரு நாளும் புதிய போக்காக அமைதலையே இற்றை உலகம் அவாவுகின்றது.

பொய்ம்மைகளுக் கிடையில் உண்மையைத் தேடுவது நெருப்புத் துண்டங் களுக்கிடையில் பனிக்கட்டியைத் தேடுவதுபோல் உள்ளது. நான் இன்னவகையில் தூய்மையினன் என்று ஒருவன் சொல்வதை ஒருவனும் இக்காலத்தில் நம்ப மறுக்கின்றான். 'நான் இவ்வாறுள்ளபொழுது நீமட்டும் எப்படித் தூய்மையாக இருப்பாய்? 'என்று ஒவ்வொருவனும் பிறனை ஐயுறுகின்றான். பொது எடைக்கல் என்பதில்லை. தன் கல்லை வைத்தே எவனும் பிறனை எடைபோடுகின்றான். ஒருவனின் கால் குட்டையாக இருப்பதையும், ஒருவனின் மூக்கு சப்பையாக இருப்பதையும் மனத்தைப் பொறுத்த மட்டில் ஒருவனும் ஒப்புக்கொள்ள அணியமாக இல்லை. எல்லாருடைய மனமும் ஒன்று போலவே இருக்கும் என்று ஒவ்வொருவனும் கருதுகின்றான். ஆகவேதான் மனவேறுபாடுகளையும் அறிவு வேறுபாடுகளையும் அவர்கள் ஒப்புக் கொள்வதில்லை. அறிவுச் செப்பமும் மனச் செப்பமும் இயலாத ஒன்றாகவே கருதப்பெற்று வருகின்றன.

உடல் உணர்ச்சிகளே தலையாயவாகவும் சிறப்பானவையாகவும் தேவையானவையாகவும் கருதப் பெறுகின்றன. உள்ளத்தின் மெல்லிய உணர்வுகளுக்கு எவரும் மதிப்பளிப்பதில்லை. அறிவூட்டமும் தூக்கியெறியப் பெறுகின்றது. இரண்டு கற்பிழந்த பெண்களுக்கிடையில் கற்புள்ள ஒருத்தி நிலையானவளாக இருக்க முடிவதில்லை. இரண்டு குடியர்க்கிடையில் ஒருவன் குடிக்காமல் இருக்க முடிவதில்லை. அவ்வாறு இருப்பது வீண் என்றும் தேவையற்றது என்றும் தன்னையே அழித்துக் கொள்ளும் தற்கொலை முயற்சி என்றும், பழமையின் பழுத்து உதிர வேண்டிய நினைவுச் சருகுகள் என்றும் கருதப் பெறுகின்றது. நீர்விடாய் கொண்ட ஒருவன் நீரை அருந்துவது பிழையில்லாததுபோல், உடல் விடாய் கொண்டவன் ஊறு உணர்வைத் தேடுவது பிழையில்லை என்று தருக்கமிடப்பெறுகின்றது.

www.thamizham.net - Free E book No 7416

கோழை கீழே புரட்டப் படுகின்றான்; அமைதியானவன் உருட்டப் படுகின்றான்; துடிப்பானவன் துடிப்பானவர்களுடன் இணைந்து, உலகம் இதுநாள்வரை கொண்ட அமைதியுரைகள், அறநெறிகள் முனிவர் மொழிகள்-முதலிய யாவற்றையும் கால்களில் போட்டு மிதித்துப் பாழ்படுத்துகின்றான்.

அறிவு விலை பேசப் பெறுகின்றது; உடல்கள் வாணிகப் பொருளாகச் சந்தைகளில் விற்கப் பெறுகின்றன. இங்கு வரலாறு, இலக்கியம், கலை, அறிவியல் யாவும் அவ்வாணிகர்களுக்குத் தொண்டு செய்கின்றன. நுண்ணியல் கலைகள் போய், பருவியல் கலைகள் உலகை ஆட்டிப் படைக்கின்றன. மெல்லிய யாழிசையும் குழலிசையும் யார்க்கு வேண்டும்? இவ்விசைகளினால் ஒன்றிப்பாயும் சாக்காட்டு அமைதிக்கு அன்றைய உலகம் கொடுத்த உருள்கலனை இன்று ஆரவார இசை தட்டிக் கொண்டு போய்விட்டது. இசை மாந்தனை அமைந்திருக்கச் செய்ய வேண்டிய தேவை என்ன? கரடிக் கத்தலும் கழுதைக் கூச்சலுமே இன்றைய உலகிற்குத் தேவை என்றாகி விட்டது. இந்தக் கூச்சலில் தான் அவர்கள் உலகியல் துன்பங்களைக் கரைத்துவிட விரும்புகின்றார்கள்; தங்கள் தளர்ந்த நரம்புகளை முறுக்கேற்றிக் கொள்ள முனைகின்றார்கள். தங்களின் மன நசைகளை மறந்து போக முயற்சி செய்கின்றனர்; நினைவு நமைச்சல்களுக்கு மருந்திட்டுக் கொள்ள முயலுகின்றனர்; தங்கள் தோல்விகளை ஏளனப்படுத்துகின்றனர்; தங்கள் அறியாமைகளுக்குத் தீமூட்டுகின்றனர்; தங்கள் கோழைத் தனங்களுக்கும் வெகுளித் தனங்களுக்கும் புகலிடம் காணுகின்றனர்; தங்கள் இல்லறத்தின் அருவருப்புகளை இக்காட்டுக் கூச்சல்களில்தாம் போட்டுப் புதைத்துவிட விரும்புகின்றனர்.

காதல் என்பது மனவுணர்வும் வாழ்வியல் உணர்வும் கலந்த சொல்லாகக் கொள்ளப் பெறுவதில்லை. உடலியல் உணர்வு சான்ற ஒரு கலை விளையாட்டு என்றே கருதப் பெறுகின்றது. இல்லறப் பிடிப்போடு ஆண்மையும் பெண்மையும் கலப்பதாகத் தெரியவில்லை. தசைத் தினவுகளுக்காகவே ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் முந்திக் கொள்வதாகப் படுகின்றது. எதிர் பாலாராகிய ஒவ்வொருவரையும் ஒவ்வொரு பாலாரும் கவர்ந்திழுத்துத் தம்மேல் நாட்டமும் ஆட்சியும் கொள்ளும்படி வெளிப்படையாகத் தூண்டும் அளவிற்குப் பாலியல் தெரிப்புகள்-உணர்ச்சிகள் மேம்பட்டு நிற்கின்றன. உடல் உறுப்புகளுக்கு இலக்கியத்திற்குக் கொடுப்பதை விட மிகுந்த மதிப்பளிக்கப்

www.thamizham.net - Free E book No 7416

பெறுகின்றது. பெண்டிரின் பாலியல் உறுப்புகள் பற்றிய பாடல்களும் கதைகளும் கலை விளக்கங்களும் அளவிறந்து பெருகியுள்ளன. ஒழுக்கம் என்பதற்கு விளக்கம் கேட்கப் பெறுகின்றது. அருவருப்பு என்னும் சொல்லுக்கு ஏற்ற விளக்கத்தைச் சட்ட மன்றமும் வரையறுக்க முடிய வில்லை. பெண்டிரின் முன்பக்கமும் பின்பக்கமும் நன்கு வண்ணிக்கப் பெறுகின்றன. உயர்நெறி மன்ற நடுவரின் தீர்ப்பைவிடகன்னிப்பெண் ஒருத்தியின் கட்டளை நிறையப் பெருமை பெறுகின்றது.

அரசியல் சட்டங்கள் நொடிக்கு நொடி தளர்த்தப் பெறுகின்றன. அறமோ பொருள் மிகுந்த தட்டின் பக்கமே சாய்ந்து நிற்கின்றது. வழக்குரைஞர்களின் மிடுக்கான சொற்களுக்கும் ஆரவாரமான புரட்டுப் பேச்சுகளுக்குமே அறமன்ற நடுவர் செவி சாய்க்கின்றார். மறைவான குடும்பச் செய்திகள் யாவாயினும் சுவைத்துக் கேட்கப் பெறுகின்றன. அவற்றைப் பச்சையாக வெளிப்படுத்தும் செய்தித்தாள்கள் இலக்கக் கணக்கில் விலை போகின்றன. பெண்டிர்களின் அரையாடைப் படங் களுக்கிருக்கும் மதிப்பு உலக மெய்யறிவாளர்களுக்கும் தலைவர்களுக் கும் கூடக் கிடைப்பதில்லை. நடிகை ஒருத்தியின் வரலாறு உலக வழிகாட்டிகளின் வரலாற்றைவிடச் சிறந்ததாகப் படிக்கப் பெறு கின்றது. பொதுமக்களின் தூங்கிக் கிடக்கும் பாலியலுணர்வுகளைத் தட்டி யெழுப்பும் வகையில் நடிக்கும் நடிகையோ நடிகரோ நாட்டின் தலைவரைப் பார்க்கிலும் பெருமை மிகுந்தவராகக் கருதப் பெறு கின்றனர். அவர்களை இளைஞர்கள் போட்டியிட்டுக் கொண்டு பின்பற்றுகின்றனர்.

மருத்துவச் சாலைகளில் வெளிப்படையான நோய்களைவிட மறை விட நோய்களே மிகுதியும் புகலிடம் கொள்கின்றன. மன நோய்கள் பெருகி வழிகின்றன. மருத்துவர்களும் செவிலியரும் நோயாளிகளுக்கு முன்னிலையிலேயே கட்டுப்பாடின்றி நடப்பதைப் பல மருத்துவமனை களில் பார்க்கலாம். காவல் நிலையங்களில் கற்பு சூறையாடப் பெறு கின்றது. குழுகாயக் கேடர்களுக்கும் காவலர்களுக்கும் நெருங்கிய இணைப்பு காணப் பெறுகின்றது. ஓர் ஊரில் நடைபெறும் திருட்டுகளுக் கும் குற்றங்களுக்கும் காவலர்கள் பெரும்பகுதி தொடர்புற்றவர் களாகக் காணப் பெறுகின்றனர். கள்ளக்கடத்தல்களும் வழிப்பறிகளும் சட்ட மீறல்களும் காவலர்கள் தொடர்பில்லாமல் நடைபெறுவதில்லை. காவலர்களுக்கு அமைச்சர்களின் ஊக்கமும் மிகுந்துவருகின்றது.

www.thamizham.net - Free E book No 7416

அமைச்சர்கள் தான்தோன்றித்தனமாக உலா வருகின்றனர். தங்களுக்குச் சிறிதும் தொடர்பற்ற எல்லா அறிவுத்துறைகளிலும் தங்களுக்குத் தோன்றும் இழிந்த கருத்துக்களையும் வெளிப்படையாகத் தெரிவிப்பதில் அவர்கள் சிறிதும் தயங்குவதில்லை. பணக்காரர்களுக்குப் பொதுமக்களின் சொத்துகளைச் சுரண்டுவதில் பலவாறு அமைச்சர்கள் துணைபுரிகின்றனர். சுரண்டப்பெற்ற சொத்துகளில் அவர்களும் பங்கு பெறுகின்றனர். இன்றியமையாத பொருள்களின் விலை மாற்றங்கள் செய்யப்பெறுவதற்காக அமைச்சர்களுக்கு ஏராளமாகக் கையூட்டுகள் தரப்பெறுகின்றன. மக்களிடம் ஒப்போலைகளைப் பெறுவதற்கு என்னென்ன தந்திரங்களைக் கையாள முடியுமோ அவற்றை மேனிலையளவாகத் துணிந்து கையாள்கின்றனர். முன்னைய நாள் பேசியதைப் பின்னையநாள் மறுத்துப் பேசுவதை அவர்கள் மிகவும் தந்திரமாகக் கையாள்கின்றனர். நாட்டுக்கு நலம் கிடைத்ததானால் தங்கள் சார்பில் வந்ததென்றும் தீமை வந்ததானால் எதிரிகள் சார்பில் வந்ததென்றும் மக்களிடம் மேடைக்கு மேடை சொல்லோவியமாகப் பல புள்ளி விளக்கங்களுடன் கவர்ச்சியாகப் பேசுகின்றவர்களே அமைச்சர்களாக வர முடிகிறது. தங்கள் பாங்கில் இருக்கும் செழிப்புகளைவிட, வறட்சிகளையே மக்களுக்குக் காட்டி அவர்களை இரக்கங்கொள்ளச் செய்வதிலும், மக்கள்பாங்கில் உள்ள 'வறட்சிகளைவிடச் செழிப்புகளையே எடுத்துக்காட்டி அவர்களை மயக்குவதிலும் திறமை மிக்கவர்களாக அமைச்சர்கள் சொற்களைக் கையாள்கின்றனர்.

பொதுவில் ஏழைகள் என்ற குமுகாய வெற்றிடம் என்றும் நிரப்பப் பெறுமலேயே உள்ளது. அவர்களுக்காக இரங்கிப் பேசுவதும் பரிவு காட்டிச் செய்வதும் ஒரு நாகரிகமான பொதுத்தொண்டாகவே கருதப்படுகின்றது. மறைமுகமாகப் பணக்காரனாகி வருகின்ற ஒருவன், ஏழைகளின் பொருட்டு ஒரு வாளிச்சேற்றை வாரிக்கொட்டவோ, ஒரு சேரியில் உள்ள குப்பைகளைப் பெருக்கவோ தன் வெள்ளை வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டும், மேல் துண்டைத் தலையில் கட்டிக்கொண்டும் எல்லார் முன்பும் முனைந்துவருவது நாடகப்பாணியில் நன்கு நடித்துக் காட்டப்பெறுகின்றது. குமுகாயச் சமநிலை எல்லாராலும் பொதுப்பாடமாகப் படிக்கப்பெறுகின்றது. திருவிழா ஊர்வலம் போல் குமுகாய முன்னேற்றத்திட்டங்கள் விளம்பரப்படுத்தப் பெறுகின்றன, ஆனால் அவற்றின் பயன்கள் புரோகிதனின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிக் கிடக்கும் கடவுள் படிமம் போல் அசைவற்றுக் கிடக்கின்றன. பொருளியல் நிகரமைப் பேச்சுகள், பொதுவுடைமைக் கருத்துகள் புனையப்பெற்ற வண்டிகளில் தெருத்தெருவாய் உலா வருகின்றன. பழக்கடைகளைப்போல அவற்றின் கொள்கைகள் கவர்ச்சியானமணத்தோடு

www.thamizham.net - Free E book No 7416

காட்சியளிக்கின்றன. அவற்றால் கவரப்பெற்ற மக்கள் ஈக்களைப் போல அவற்றில் மொய்த்துக் கிடக்கின்றனர். வெறும் மணத்தால் மட்டும் பசி அடங்குவதாயின் எவ்வளவு நன்றாகவிருக்கும்! கவர்ச்சியான கொள்கைகளைவிடக் கவர்ச்சியற்ற ஒரு சிறு தொண்டிற்குள்ள உண்மையானபயனை பெரும்பாலர் உணரவே மறுக்கின்றனர். ஒவ்வொரு கொள்கையும் ஒவ்வொரு கட்சியாக உருவெடுக்கின்றது. பெரும்பாலும் எல்லாக்கட்சிகளின் கொள்கைகளும் ஒன்றாகவே இருந்தாலும் ஒன்றையொன்று எதிர்ப்பதாலேயே அவர்களின் எந்தக் கொள்கையும் நிறைவேறாமலேயே கிடக்கின்றது. வாய்க்காலை அடைத்துக்கொண்டு கிடக்கும் கற்குவியல் போல், கட்சிக்குவியல்கள் முன்னேற்ற வாயிலை அடைத்துக்கொண்டு கிடக்கின்றன. அக்கட்சிகள் தத்தமக்குள் ஒன்றையொன்று புரிந்து கொண்டு இளக்கம் பெறுமானால், தடையின்றி வரும் நீர் போல், முன்னேற்ற வாய்க்காலில் அவைதம் கருத்துகள் இளகியோடும் என்பதை அவை யறியாமலிருப்பது மிகவும் வருந்தற்குரியதாக உள்ளது.

கல்விக்கூடங்களில் பயனைவிட ஆரவாரமே மிகுந்து ஆட்சி செய்கின்றது. சமய வேறுபாட்டுணர்ச்சிகளும் குலவேற்றுமைகளும் சிறுவர்களின் பாடப்பொத்தகங்களில் மறைமுகமாகப் புகுத்தப்பெறுகின்றன. பகுத்தறிவுக் கருத்துகள் பெரிதும் புறக்கணிக்கப்பெறுகின்றன. மாணவர்களின், உள்ளங்கள் பெரிதும் கல்வியிலேயே ஊன்றுமாறோ, வாழ்விற்கு வேண்டிய செப்பங்களை உணருமாறோ கல்வி கற்பிக்கப் பெறுவதில்லை. நூலாசிரியர்கள் போட்டியிட்டுக் கொண்டு அறிவுச்செறிவற்ற நூல்களை எழுதித் தீர்த்து, அவற்றைக் கல்வியதிகாரிகளின் பரிந்துரைகளுடன் மாணவர்கள் உள்ளங்களில் திணிக்கின்றனர். பரிந்துரைகளுக்கு விலை கூறப்பெறுகின்றது. உயர்ந்த விலை அல்லது கையூட்டுப் பெறும் நூல்களே, மாணவர்தம் கைகளுக்கு போகின்றன. ஆசிரியர்கள் பொழுது போக்காகவே கற்பிக்கின்றனர். மாணவர்களும் பள்ளிக்கு வருவதையும் அந்நூல்களைப் படிப்பதையும் ஒரு பொழுது போக்காகவும் தொல்லையாகவுமே கருதுகின்றனர். உடைகளிலும் ஒழுக்கக் கேடுகளிலும் செலுத்தும் கருத்துகளைவிட மாணவர்கள் கல்விக்குச் செலவிடும் கருத்துகள் மிகமிகக் குறைவாகவே தென்படுகின்றன. பள்ளிப்பாடங்களைவிடத் தரக்குறைவான மஞ்சள் தாளிகைகளிலும் பாலியல் நூல்களிலும் மாணவர்கள் மிகுந்த கருத்துச் செலுத்துகின்றனர். திரைப்பட நடிக நடிகையரின் படங்கள் மாணவர்தம் உள்ளங்களின் நல்லுணர்வுகளைக் கொள்ளை கொள்கின்றன. அவர்களின் ஒழுக்கம் பாழ்போக்கப்படுவதை எந்த நல்ல உள்ளமும் பொறுத்துக்கொள்ள முடியாது. பதினைந்து அகவை மாணவன் இருபத்தைந்தாண்டு முதிர்ச்சி

www.thamizham.net - Free E book No 7416

யடைந்தவனைப் போல் உள்ளத்தாலும் உடலாலும் தோற்றமளிக்கின்றான். பள்ளித் தேர்வுகளிலும் பணம் உயர்ந்த மாறுதல்களைச் செய்கின்றது. வாழ்க்கைக்குத் துளியும் பயனற்ற கல்வியே கற்பிக்கப் பெறுகின்றது.

தொழிற் கூடங்களில் தொழிலாளர்கள் கூட்டுணர்ச்சிகளைப் பயன்படுத்தி எந்த ஒரு சிறு நோக்கத்தையும் நிறைவேற்றிக் கொள்கின்றனர். அரசினர் துறையோ தனியார் துறையோ எதிலும் தொழில் மிகவும் சீர்கேட்டடைந்து கிடக்கின்றது. உழைக்காமல் உயரும் மனப்பான்மையையே பெரும்பாலான தொழிலாளர்களிடம் காண முடிகின்றது. தங்கள் மெலிந்த எண்ணங்களுக்கு ஊக்கம் கொடுப்பவரையே தொழிலாளர்கள் தங்கள் தலைவராக ஏற்றுக்கொள்கின்றனர். குறுக்கு வழிகளில் வெற்றி தேடிக் கொள்ளும் சில சோம்பேறிகள் உண்மையாக உழைக்கும் சிலரைவிடச் சிறந்த பயன் பெறுகின்றனர். அரசினர் அலுவலகங்களிலும் இதே நிலை காணப் பெறுகிறது. அதிகாரமுற்ற அலுவல்களில் ஆடவர்களும் பெண்டிர்களும் போட்டியிட்டுக் கொண்டு நுழைகின்றனர் பெண்டிரின் பெண்மைக்கும் ஆடவரின் ஆண்மைக்கும், அலுவல்கள் பெரும்பாலும் தளர்ச்சி நிலையையே ஏற்படுத்துகின்றன. தொழிற் கூடங்களைவிட எழுத்தர் அலுவலகங்களிலேயே கூட்டங்கள் மிகுந்துள்ளன. பெரும்பாலும் உடலுழைப்பை விட மேலோட்டமான பணிகளையே யாவரும் விரும்புகின்றனர். மேனிலைக் கல்வியும் இதன் பொருட்டே கற்கப்பெறுகின்றது. இதனால் அலுவல் பார்ப்பவர்கள் உடல் வளமற்ற நோயாளிகளாகவே காணப்படுகின்றனர் அலுவலர்களில் பாதிக்கு மேற்பட்டோர் ஈளை, காசம், எலும்புருக்கி, மூலம் முதலிய நோய்களால் துன்புறுகின்றனர். மனநோயாலும் நரம்புத் தளர்ச்சியாலும் துயருறுகின்றனர். இவர்கள் பெற்றெடுக்கும் பிள்ளைகள் பெரும்பாலும் வலுக்குறைந்த உடல் தன்மைகளையே பெற்றுள்ளனர்.

குமுகாய அமைப்பில் கூட்டுணர்ச்சி பெருகி வருகின்றதேனும் மாந்தனுக்கு உள்ள இணைப்பு உணர்வு குறைந்தே வருகின்றது. ஒவ்வொருவனும் மற்றவனை வேறாகவே கருதுகின்றான். குல அமைப்புகள் வலுக்குறைந்து தோன்றினும், திருமணம் போன்ற வாழ்வியல் நிகழ்ச்சிகளில் அவை இன்னும் பழைய ஆட்சியினின்றும் விடுபட்டதாகத் தெரியவில்லை, மூடநம்பிக்கைகள் பெருகிக் காணப்படுகின்றன. சிறு

www.thamizham.net - Free E book No 7416

சிறு வினைப்பாடுகளிலும் தன்னம்பிக்கை இழக்கப்பெறுகிறது. பொது முன்னேற்றத்தைவிடத் தனித்தனி முன்னேற்றத்தையே பலரும் விரும்புகின்றனர். கூடிப் பேசுவதும் தனித்துச் செயலாற்றுவதுமே உள்ளூர விரும்பப்பெறுகின்றது. கரவாட்டங்கள் பெருகி உள்ளன. தனிப்பட்ட நிலையில் ஒருவன் கோழையாகவும் புல்லிய எண்ணங்களைக் கொண்டவனுகவுமே காணப்படுகின்றான். தவறு செய்ய வாய்ப்பு கிடைக்குமானால் பெரும்பாலானவர்கள் தவறும் மனப்பான்மையுடையவராகவே காணப்பெறுகின்றனர் பொதுவொழுங்கு குறைந்து வருகின்றது. பண்பாடும் சீர்குலைந்து வருகின்றது. சிறகு முளைக்கின்ற எல்லா எண்ணங்களும் குமுகாய வானில் கட்டுப்பாடின்றிப் பறந்து திரிகின்றன. மக்கள் போலிப் பகட்டிலும் புன்மை யொழுக்கங்களிலும் மனத்தைப் பறிகொடுக்கின்றனர். ஆரவாரப் பொருள்களும் அழகுப் பொருள்களும் உணவுப் பொருள்களைவிட மிகுந்து விலை போகின்றன.

புறவுலகம் மேலும் மேலும் ஒளியூட்டப் பெற்று வருகையில் அகவுலகம் மேலும் மேலும் இருளடைந்து வருவதாகப் படுகின்றது. கடந்த ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த அறநூல்கள் இன்னும் தம் கொள்கைகளில் வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை இவற்றைப்பற்றி எவரும் நினைத்துப் பார்க்கவும் விரும்பவில்லை. விரைந்துபோய்க்கொண்டிருக்கின்ற இவ்வுலகத்திற்கு இலக்கு மறக்கடிக்கப்பெற்றுவிட்டதோ? அல்லது இவ்வுலகம் தனக்குத் தானே தோலுரித்துக் கொண்டதோ? மாந்தனின் நோக்கம் என்ன என்பதைப் பற்றி மாந்தனுக்குப் பயிற்றுவது யார்? அதனை ஒப்புவதுயார்? மறுப்பதுயார்? மாந்தன் தனக்குத் தானுகவேதான் ஒப்பவும் வேண்டும். மறுக்கவும் வேண்டும். ஓடிக் கொண்டிருக்கும் காலவெள்ளத்திலாடிக்கொண்டிருக்கும் இம்மாந்தக் கொடியை யாரால் நிலைப்படுத்தி விடமுடியும்? தனிப்பட்ட ஒருவன் எவ்வளவுதான் எண்ணினாலும் செயற்பட்டாலும் பொது மாந்தர் அளவில் அவ்வெண்ணமும் செயலும் கரைந்தே போகின்றன.

இத்தகைய எண்ணத் தொடர்கட்கிடையில் நான் சொல்லவிரும்புவது இதுதான். மாந்தன் தன் எண்ணங்களை எண்ணங்களாகவே பார்த்துச் சுவைக்கிருன். அவற்றைச் செயலாக்கி வருந்தவோ மகிழவோ விரும்புவதில்லை. அவன் கண்களெதையோ பார்த்தாலும், காதுகளெதையோ கேட்டாலும், வாய்களெதையெதையோ பேசினுலும் கால்கள் மட்டும் எங்கேயோ போய்க்கொண்டிருக்கின்றன. எண்ணங்

www.thamizham.net - Free E book No 7416

தென்மொழி நலமில்லை;
நீங்கள் நலமா?

(ஒரு விளக்கம்)

'தென்மொழி' 1959-இல் தொடங்கப்பெறுகையில் எப்படி நான் தனியனோ, இன்றுமப்படியே தனியன். இடையில் ஏறி இறங்கியவர் சிலர். தென்மொழித் தொடக்கத்தில் நான் அரசினர் அலுவலில் இருந்ததால் புனைபெயரில் என் உயிருக்கினிய அன்பர் ஒருவர் துணையுடன் இயங்கினேன். உண்மையான "தமிழ் வளர்ச்சிக்கே இத்தமிழகத்தில் இடம் இல்லை. தனித்தமிழ் வளர்ச்சிக்கோ கனவிலும் இடமில்லை" என்று கூறி என் முயற்சியை ஏளனத்தோடு பார்த்தவர் அன்று பலர். இரக்கத்தோடு பார்த்தவர் சிலர், பிழைக்கத் தெரியாதவன் என்று குறை கூறாதவர்களே இல்லை.

அடிகளார் (அடிகளார் என்றாலே தமிழகத்தில் மறைமலையடிகள் ஒருவரே) தொடங்கிய இத்தனித்தமிழ் இயக்கம் அவருடனேயே மறைந்தது என்று சொல்லும்படி அன்றிருந்தது. அவரைத் தமிழ்ப் பகைவர்கள் எந்த அளவு வெறுத்தனர் என்பதை அளவிடவே முடியாது. பார்ப்பனரின் துணையில்லாமல் பிழைப்பதே அரிது என்று கருதிய தமிழ்ப் புல்லுருவிகள் தமிழருக்கே பெருந்தடையாய் நின்றனர். பாவாணர் ஒருவர் வாயில்தான் நல்ல தமிழைப் பார்க்கலாம். ஆனால் பாவாணர் எத்தனைத் தமிழர்களுக்கு அறிமுகம் ஆகியிருந்தார்?

இப்பொழுது தாங்கள் பேசுவதெல்லாம் எழுதுவதெல்லாம் தனித்தமிழ் என்று பெருமை பேசுகிறவர்கள் மிகுதி. தனித்தமிழ் என்றால்

(முன் பக்கத் தொடர்ச்சி)

களை அவை சுமக்க விரும்புகின்றன. ஆனால் அவற்றிற்குத் தாமே சுமையாக விரும்பவில்லை. எனவே அவை தன்னளவில்தான் நடைபோட விரும்புகின்றன. இப்போக்கைத் தடுத்து நிறுத்தும் வல்லமை யாருக்கும் இல்லை. தி. பி. 2000 ஆண்டில் மட்டுமன்று. தி.பி. 20000 ஆண்டிலும் (அப்படி ஓர் ஆண்டு மாந்தனின் காலடிக் கீழ்ப் படுவதானாலும்) மாந்தனின் அக முன்னேற்றம் இவ்வளவுதான்! இவை வெறும் கற்பனை இல்லை' கருத்து முடிவு.

www.thamizham.net - Free E book No 7416

வெறுப்போடு பார்க்கின்ற நிலைபோய் வியப்போடும் விருப்போடும் பார்க்கின்ற நிலை இன்று. இதற்கு முழுக்காரணியமும் தென்மொழியே என்று சொல்லித் தருக்கிக்கொள்ளும் தலைக்கொழுப்பு எனக்கில்லை ஓரளவுக்குத் தென்மொழி தனித்தமிழை – தனித்தமிழ் உணர்ச்சியை மறந்துபோகாமல் தமிழர்களுக்கு நினைவூட்டிக்கொண்டிருந்தது என்ற அளவில் நான் மனநிறைவு கொள்ளமுடியும். தென்மொழி இதுவரை எழுதிய ஏறத்தாழ ஒன்பதினாயிரம் பக்கங்களில் தென்மொழித் தொடர் பற்ற விளம்பரத்திற்காக விணடித்த பக்கங்கள் நான்கோ ஐந்தோ! விளம்பரத்திற்கென வந்த வருவாய் பத்தாண்டுகளில் ஏறத்தாழ எழுபத் தைந்து உருபாக்கள். இன்று வெளிவரும் நூற்றிருபது பக்கங்கள் உள்ள சில தாளிகைகளில் ஒவ்வொரு வெளியீட்டிலும் 60 அல்லது 70 பக்கங்கள் வெறும் விளம்பரமாக வெளிவரும் நிலையினையும் தென்மொழியையும் ஒப்பிட்டுநோக்கினால் தென்மொழி எதற்காகத்தொடங்கி வெளியிடப் பெறுகின்றது என்ற உண்மை தென்மொழியைப் படிக் காதவர்களுக்குக்கூட எளிதில் புரியும்.

தென்மொழி தலையாய கொள்கை ஒன்றினை நோக்கித் தொடங் கப்பெற்ற ஓரிதழ். கொள்கைக்காக நடத்தப்பெறுகின்ற வேறு இதழ் களும் இருக்கலாம். இல்லை என்று சொல்ல நான் விரும்பவில்லை. ஆனால் அவற்றிற்கும் தென்மொழிக்கும் ஒரு பெருத்த வேறுபாடு உண்டு. தென் மொழி எதைக் கொள்கையாகக்கொண்டதோ அந்தக் கொள்கைக்குத் துளியும் மாறின்றி மறுவின்றி அதன்போக்கு அன்றும் இன்றும் அமைந் துள்ளது. இனியும் நான் உள்ளவரை அப்படியே அமையும்.

விரும்புபவர்களுக்கு மருத்துவம் பார்க்கலாம். விருப்பம் இல்லா தவர்களுக்கு மருத்துவம் பார்க்கமுடியாது. இனி விருப்பம் இல்லா விட்டாலும் தாழ்வில்லை; வெறுப்புள்ளவர்களுக்கு அறவே மருத்துவம் பார்க்க இயலாது. இனி, அந்த வெறுப்பும் பகையாக இருக்குமானால் மருத்துவன் ஊரைவிட்டே ஓட வேண்டியதுதான். இனி, பகையென் றாலும் தப்பித்துக்கொள்ள வாய்ப்புண்டு; உட்பகையாக இருக்குமேல் மருத்துவனுக்கு என்றைக்கு உயிர்போகுமோ சொல்லமுடியாது.

தமிழர்களை நாகரிகமுற்றவர்கள், பண்புள்ளவர்களாகத் தமிழ்ப் பேராசிரியர்கள், தமிழர்களைமாற்றிப் பணம் பறிப்பவர்கள் ஒப்போலை கேட்கும் அரசியல்காரர்கள் முதலியோர் கூறி மகிழலாம். இலக்கியச் சொற்பொழிவாளர்களைப் பற்றிக் கூறவேண்டியதில்லை. அவர்கள் கூறும் பண்புகளை நானும் ஒப்புக்கொள்ளாமல் இல்லை. ஆனால் அப் பண்புகளுக்குரிய தமிழர்கள் இன்று வாழ்கின்றனரா என்பது எனக்கு ஐயமே! (என்னையும் உள்ளடக்கியே கூறுகின்றேன்). இன்றைக்குள்ள தமிழர்கள் நோயாளிகள்; தமிழ்ப்பண்பை அறவே மறந்தவர்கள்.

www.thamizham.net - Free E book No 7416

இனநலம் பேணுதவர்கள். தம் இனத்தையே கொள்ளை அடிப்பவர்கள் தம் உடன் பிறப்புக்களையே பகைவர்களாகக் கருதுபவர்கள். இவர் களுக்கிருக்கும் நோய் ஒன்றிரண்டன்று! உடல்முழுதும் நோய்.

இவர்கள் நோயைக் குணப்படுத்த அரிமாக் கணக்கண்டேன். வானக்கோட்டை கட்டினேன். குதிரைக்கொம்பிற்கு அலைகின்றேன்; முயற்கோட்டை எண்ணி நடையாய் நடக்கின்றேன். என் பின்னால் வருபவர்களுக்கு ஏமாற்றத்தைத் தவிர ஒன்றும் மிஞ்சப்போவதில்லை என்று எனக்குத் தெரியும். அவர்கள் உருப்படியாகப் போவதில்லை என்பதை நான் அறிவேன். ஏனெனில் எனக்குப் பாராட்டத்தெரியாது; பொய்யாகப் புகழ்ந்துரைக்க நான் விரும்பமாட்டேன்; நடிக்கத் தெரி யாது; அன்பை மறைக்கத் தெரியாததுபோலவே. அருவருப்பையும் மறைக்கத் தெரியாது; சிரிப்பை அடக்கத் தெரியாததுபோலவே சினத் தையும் அடக்கத் தெரியாது. வினைப்பாட்டில் நெருப்பைப்போல் காய் கின்றேன். என் சொல்லில் என்றும் குளிர்ச்சி காட்டியதில்லை. உள் ளத்தை உதட்டால் எழுதுகின்றேன்; பேசுகின்றேன்; யாருக்காகவும் நான் அஞ்சியதில்லை; நடுங்கியதில்லை; தளர்ச்சியுற்றதில்லை; குழைந்தது மில்லை. கோணலானதுமில்லை. நோக்கம் நோக்கம்; வினை; வினை!

எனவே என்னை நாடி வந்தவர்களுக்கு வறட்சியே காத்திருந்தது. தொண்டு குளிர்ந்ததாக இருந்ததை நான் என்றும் கண்டதில்லை. பத் தாண்டுகளுக்குமுன், எப்படி தென்மொழியைக் கொணரப் பாடுபட் டேனே, அதே பாடுதான் இன்றும். தென்மொழி அமைப்பு ஒருவாறு வளர்ந்துள்ளது உண்மைதான்.. ஆனால் அதன்முயற்சியில் ஒரு மாற்றமு மில்லை, அன்று அச்சடிக்க அச்சகத்தைத் தேடினேன்; இன்று அச்சகம் உள்ளது; ஆளைத் தேடுகின்றேன். ஆள் என்றால் தொழிலாளர் மட்டும் அல்லர். தொண்டர்களுந்தாம்.

தென்மொழிக்கு இங்கெடுத்துக் கூறமுடியாத பல இடர்ப்பாடுகள். அதனால் தென்மொழி ஏன் காலந்தாழ்ந்து வருகின்றது என்பதற்குரிய காரணியத்தை முழுமையாகச் சொல்லிவிட முடியாது. மொத்தத்தில் அதற்கான விடை இதுதான்;

தென்மொழி வரும்போது தவறாமல் வந்துகொண்டே இருக்கும். படிக்கும்போது படிந்துக்கொள்ளுங்கள். பயன்கண்டால் மேலும் படி யுங்கள், இல்லையெனில் தூக்கி வீசிவிட்டு ஒரு குமுதத்தையோ ஆனந்தவிகடனையோ, கல்கியையோ வாங்கிப் படித்து மகிழ்ந்துகொள் ளுங்கள். இப்படியிப்படி யெல்லாம் இருந்தாலன்றோ கொள்கையை வளர்க்கலாம் என்கின்றீர்களா? அதற்கு நான் எப்படி எப்படி மாறி வளைந்து நடிக்கவேண்டும் தெரியுமா? அதுதான் இந்தப் பிறவியில்

www.thamizham.net - Free E book No 7416

பூனாவிலிருந்து ஒரு மடல்!

அன்பு ஐயா வணக்கம்! இங்கு எம் துணைவியும் யானும் நலமே. தாங்களும் தென்மொழிக் குடும்பமும் நலமுடனிருப்பீர்கள் என நம்புகின்றேன். தங்களைச் சுற்றமாய்ச் சுற்றும் உலகும் நலம்பெறவேண்டுவல்.

நாங்கள் சாம் நகரிலிருந்து பூனா வந்துவிட்டோம். இவ்விடத்தில் எங்கள் வாழ்க்கை நன்றாக இல்லை. காரணியம், பம்பாய் அண்மையில் மேலையர் நாகரிகம் ஆரவாரத்தையும் மேலோட்டமான வாழ்க்கைச் சூழ்நிலையையும் ஏற்படுத்தியுள்ளது முழுமையான இந்திய நாகரிகத்தையோ மேலைபர் ஆங்கிலேய நாகரிகத்தையோ காணமுடியவில்லை. பணக்காரர் நாகரிகமே தனி. ஏழை நாகரிகமே வேறு. அடடா! அன்றாட

(முன்பக்கத் தொடர்ச்சி)

என்றால் முடியாதே! நான் என்னசெய்ய? உயிரை இழந்தாலும் நான் இழந்துவிடுவேன், என் உள்ளத்தை இழக்க முடியாதே! இதுபோகட்டும். பொருளியலில் என்ன? நான் ஆயிரமாயிரமாகவா வைத்திருக்கின்றேன். நினைத்தவுடன் இதழை அச்சிட்டு வெளிப்படுத்திவிட....? அன்றாடம் காய்ச்சி. அஃதாவது அஞ்சல்காரன் கொண்டுவரும் பணவிடைகளின் அளவைப் பொறுத்துத்தான் அன்றைய தென்மொழி வேலை! அச்சு; அமைப்பு; தொண்டு; பயன் முதலியவெல்லாம். ஏன் சமையலே அதைப் பொறுத்ததுதான். இதையெல்லாம் ஏன் இவ்வளவு பச்சையாக எழுதுகின்றேன் என்றால்; என் உள்ளத்தைத் தவிர நான் என்னை என்றோ இழந்துவிட்டேன், இப்போது நான் மானத்தையும் கருதவில்லை. மதிப்பையும் எதிர்பார்க்கவில்லை. வேறு யாருக்காகவும் நான் அவற்றை இழக்கவில்லை. தமிழுக்காகவும், அந்த மொழியைத் தத்துப் பித்தென உளறிக்கொட்டும் தமிழருக்காகவுந்தான் இழந்தேன். ஆகவே தென்மொழியின் காலத் தாழ்த்தத்திற்கு நான் மட்டும் பொறுப்பாகேன்.

இந்த இதழ் பழுப்புத்தாளில் வருகின்றது. வெள்ளைத்தாள் விலை மிகுதி. 27 உருபா விற்ற தாள் 38 உருபா விற்கின்றது. மூச்சுவிட முடியவில்லை. என்னால் செய்ய முடிந்ததைச் செய்துகொண்டே சாவேன். இயன்றவரை கட்டாயம் செய்வேன். எனவே கவலைப் படாதீர்கள், தென்மொழி நிற்காது வரும். அவ்வப்பொழுதுள்ள நிலைகளுக்குத்தக முன்னும் பின்னும் வந்துகொண்டுதான் இருக்கும். அவ்வளவுதான் என் வெயர்வையால் விளைக்கும் வேளாண்மை! முடிந்தால் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

— பெருஞ்சித்திரன்.

www.thamizham.net - Free E book No 7416

பல்குழுவும் உட்பகையும் கொல் குறும்பும்

மொழிப்பேரறிஞர். ஞா. தேவநேயப் பாவாணர்.

"பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங்
கொல் குறும்பு மில்லது நாடு." (குறள்-எ௩௫)

ஒரு நல்ல நாட்டிற்கு இருக்கவேண்டிய நிலைமைகளையும் இல்லாதிருக்க வேண்டிய நிலைமைகளையும், நாடு என்னும் அதிகாரத்தில் எடுத்துக் கூறியுள்ளார் எல்லா நாட்டு மக்களும் இன்புற்று வாழ்தற்கு வழிவகுத்த திருவள்ளுவர். இல்லாதிருக்க வேண்டிய நிலைமைகளுள் மூன்று, பல்குழு, உட்பகை, கொல்குறும்பு என்பன இவ்விலக்கு ஆட்சித்துறைக்குப் போன்றே மொழித்துறைக்கும் ஏற்கும்.

பல்குழு:

ஒரு நாட்டுமக்கள் முன்னேறுவதற்கு வழி மொழியே. அது காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப ஒன்றும் பலவுமாயிருக்கலாம். கூட்டுநாடல்லாத தனி நாடுகளிலும் கூட்டுநாடுகளின் கூற்றுநாடுகளிலும், பொதுமக்களும் புலமக்களும் ஒருங்கே, முன்னேறுவதற்கு ஒரே வழி தாய்மொழி யென்னும் நாட்டு மொழியே. தமிழ்நாட்டின் தாய்மொழி தமிழ் என்பதை நாட்டின் பெயரே காட்டும். ஆகவே, தமிழுயரத் தமிழன் உயர்வான் என்பதும், தமிழ் தாழத் தமிழன் தாழ்வான் என்பதும் சொல்லாமலே பெறப்படும். சிலர் தமிழன் உயர்ந்தால்தான் தமிழ் உயரும் என்று தலைகீழாக மாற்றிக்கூறுவர். அக்கூற்றை, வையாபுரிகளைக் காட்டுங் கண்ணாடியாகக் கொள்க. ஏனெனின், தமிழை உயர்த்தாது அதை என்றும் ஆரியர்க்குக் காட்டிக்கொடுத்து, தந்நலத்தால் தம்மை உயர்த்திக் கொள்வதே வையாபுரிகள் இயல்பு. தமிழ் என்னும் சொல்லினின்று தமிழன் என்னும் பெயர் தோன்றியிருப்பதே, தமிழாலேயே தமிழன் என்னும் இனம் தோன்றிற்று என்பதைக் காட்டும்.

தமிழ் வரலாற்றை அடிநாளிலிருந்து நோக்கின், ஆரியச் சூழ்ச்சியால் பல்வேறுவகையில் தமிழ் கெடக்கெடத் தமிழனும் உடன் கெட்டு வந்திருப்பதைக் காணலாம். இந்நூற்றாண்டில் மாபெரும் புலவரான மறைமலையடிகளின் அரும்பெரு முயற்சியால் தமிழ் வடசொற்களைப் பெற்று மீண்டுந் தனிமொழியாக்கப்பட்டபின், தமிழன் சற்று உயர்ந்திருப்பதையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். இதினின்று,

www.thamizham.net - Free E book No 7416

தமிழ் வாழ்வே தமிழன் வாழ்வு என்பதைத் தெற்றெனத் தெரிந்து கொள்க.

தமிழை வளர்த்தற்குத் தமிழகம் முழுதுந் தழுவிய பாண்டியன் தமிழ்க் கழகம் ஒன்றே பண்டைக் காலத்தில் இருந்து வந்தது. இக் காலத்திலோ, மதுரைத் தமிழ்ச் சங்கம் என்றும், கரந்தைத் தமிழ்ச் சங்கம் என்றும், திருநெல்வேலித் தமிழ்ச்சங்கம் என்றும், திருச்சி ராப்பள்ளித் தமிழ்ச் சங்கம் என்றும், சென்னைத் தமிழ்ச்சங்கம் என்றும், பிறவாறும், ஆரிய அடிப்படையிலும் குல வடிப்படையிலும் இடவடிப்படையிலும் மதவடிப்படையிலும் பல கழகங்கள் தோன்றி, மொழியடிப்படையில் தமிழ் முன்னேற்றமடையாவாறு தாமே முட்டுக் கட்டை யிட்டுக்கொண்டுள்ளன.

இனி, இக் குறைகளை நீக்கி நிறைவுபெறத் தோன்றிய தமிழகப் புலவர் குழுவும், முதலிரு தமிழ்க்கழகம் போல் பற்றும் மூப்பும் புலமை யும் ஒருங்கேயுடைய புலவரை யெல்லாம் கொள்ளாது, கடைக்கழகத் தின் இறுதிக்காலப் புலவரின் தொகையையே அடிப்படையாகக் கொண்டு, ஏழேழ் வகைப்பட்ட இளைஞரும் முதியருமான பல திறத் தமிழறிஞரையே கொண்டுள்ளது.

பண்டைக் கடைத் தமிழ்க் கழகமும் நிறைபுலமை யடிப்படையி லன்றி, இயற்றமிழ்ப் புலவர் எழுவர், இசைத்தமிழ்ப் புலவர் எழுவர், முத்தமிழ்ப் புலவர் எழுவர், இருமொழிப் புலவர் எழுவர் என்றோ; அந்தணப் புலவர் எழுவர், அரசப்புலவர் எழுவர், வணிகப் புலவர் எழுவர், வேளாளப் புலவர் எழுவர், வேட்டுவப் புலவர் எழுவர், இடைப்புலவர் எழுவர், நுளைப்புலவர் எழுவர் என்றோ; சிவனியப் புல வர் எழுவர், திருமாலியப் புலவர் எழுவர், சமணப்புலவர் எழுவர், புத்தப் புலவர் எழுவர், அளவை மதப்புலவர் எழுவர், உலகமதப் புல வர் எழுவர், மதமிலாப் புலவர் எழுவர் என்றோ; பாண்டிநாட்டுப் புல வர் எழுவர், சோழநாட்டுப் புலவர் எழுவர், சேரநாட்டுப் புலவர் எழு வர், கொங்குநாட்டுப் புலவர் எழுவர், தொண்டைநாட்டுப் புலவர் எழுவர், கருநட நாட்டுப் புலவர் எழுவர், வடுகநாட்டுப் புலவர் எழு வர் என்றோ; புலவர் நாற்பத்தொன்பதின்மரைக் கொண்டிருந்த தில்லை.

மேலும், கடைக்கழகம் ஒன்றே இறுதியில் நாற்பத்தொன்பான் புலவரைக் கொண்டிருந்தது. தலைக்கழகப் புலவர் தொகை ருசக(549) இடைக்கழகப் புலவர் தொகை ருக (59).

www.thamizham.net - Free E book No 7416

முக்கழகத்திலும் உறுப்பினர் தொகை ஒருபோதும் வரையறுக் கப்படவில்லை. அவ்வப்போது புதுப்புலவர் வரினும் தகுதிபற்றிச் சேர்க்கப்பட்டனர். இதையே, கழகப் பலகை தகுந்த புலவரடுப்பின் தானே ஒரு முழம் நீண்டு இடங்கொடுக்கும் என்பது தெரிவிக்கும்.

பற்றும் மூப்பும் புலமையும் ஒருங்கேயுடைய தமிழ்ப் புலவரெல் லாம் தமிழகப் புலவர் குழுவில் இடம்பெற வில்லை. அதன் உறுப்பின ரெல்லாரும் இம்மூத் தகுதியும் உடையவருமல்லர். ஒரு சிலர் தமிழுக்கு மாறாகப் பேசியும் எழுதியும் வருவதும் வெளிப்படை. (தனித்) தமிழ்ப் பெயர் தாங்கவோ தூய தமிழிற் பேசவோ பலர்க்கு ஆற்றலுமில்லை; விருப்பமுமில்லை. இதுவரை நடைபெற்ற எத்தனையோ கூட்டங் களுள் ஒன்றிலேனும், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகர முதலிச் சீர்திருத்தம் பற்றித் தீர்மானம் நிறைவேற்றப்படவுமில்லை. சூழ்வுக் கூட்டங்களில் இயன்றவரையிலேனும் தனித்தமிழ்நடை கையாளப் பெறுவதில்லை; அக்குறிக்கோளுமில்லை.

இனி, சென்னையையும் புதுவையையும் தலைநகராகக் கொண்ட இற்றைத் தமிழ்நாடுகள் இரண்டிற்கும் பொதுவாக, ஒரே, உண்மை யான, நிலையான, அஞ்சாத, தன்னலமற்ற, பல்துறையுந் தழுவிய, முழுப்பொறுப்பேற்ற தமிழ்நிறுவனம் இருத்தல் வேண்டும். அதுவே, உலகத் தமிழ்க் கழகம். இனிமேல் இந்தியெதிர்ப்புப் பற்றியோ, தமிழ்வளர்ச்சி பற்றியோ, வேறு எவ்வமைப்பும் ஏற்படவோ முயற்சியிலீடுபடவோ வேண்டியதில்லை. அத்தகைய நோக்கமுள்ளவ ரெல்லாரும் இதிற் சேர்ந்துகொள்ளலாம்.

உட்பகை:

எல்லாத்துறையிலும் இன்று தமிழுக்கு மாறாக நின்று அதைப் பகைவர்க்குக் காட்டிக்கொடுக்கும் உட்பகையார், பேராயக்கட்சியாரும் வையாபுரிகளும் என இரு சாரார்.

பேராயக்கட்சி தமிழ்நாட்டில் தமிழுக்கு மாறாகவே தோன்றிற்று. அதைத் தோற்றுவித்தவர் சமற்கிருத வெறியரான ஆரியரே. தமிழை யும் அதன் இலக்கியத்தையும் தமிழ் நாகரிகப் பண்பாட்டையும் தமி ழர் வரலாற்றையும் அறியாதவரும், தமிழ்ப்பற்றும் தமிழ இனப்பற் றும் இல்லாதவரும், ஆகிய தந்நலத் தமிழரையும் தமிழ இளைஞரை யும், பேராயக்கட்சியின் ஆரியத் தன்மையை மறைக்கவே அதன் (ஆரியத்) தலைவர் துணைவராகவும் தொண்டராகவும் சேர்த்துக் கொண்டனர். ஆங்கிலேயரால் தமிழர்க்குச் சில சிறு தீங்குகள் நேர்ந்

www.thamizham.net - Free E book No 7416

தனவேனும், அவரால் விளைந்த பல்வேறு நன்மைகள் அவற்றை எளி தாய் மறைக்கவும் மறப்பிக்கவும் வல்ல மாபெரு மாண்புடையன வாகும். இதை யறியாதார் வரலாற்றறிவில்லாதாரே.

அனைத்திந்தியப் பேராயக் கட்சியைத் தோற்றுவித்தவர் இயூம் (Hume) என்னும் ஆங்கிலரே. இந்தியரைப்படிப்படியாகத்தம்மாட்சிக் குத் தகுதிப்படுத்தி வந்த ஆங்கிலர், தாமாகவே இந்திய ஆட்சியை இந்தியரிடம் ஒப்படைத்துவிட்டுச் செல்லவிருந்தனர். அவரை விரைந்து விரட்டியதே பேராயத்தார் செய்த செயல். அதனால் விளைந்த விளைவே சீனத்தாக்குதலும் பாக்கித்தான் போரும் மொழிச் சிக்கலும். ஆங்கிலர் நீங்கினபின், காந்தியடிகள் பேராயத்தைக் கலைக்கச்சொல்லி யும் அதன் தந்நலத்தலைவர் கலைத்திலர்.

தமிழ்நாட்டுப் பேராயக்கட்சியைத் தோற்றுவித்த ஆரியத் தலைவ ருள் மாபெரும்பாலார் மறைந்துவிட்டனர். இரண்டொருவர் இன்று மிருப்பினும் அக்கட்சியைவிட்டு விலகியுள்ளனர். ஆகவே தலைமைப் பதவிக்கு முழு வாய்ப்புப்பெற்ற தந்நலத்தமிழரே இன்றும் அக்கட்சி யில் ஒட்டிக்கொண்டு தமிழைக் காட்டிக்கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், ஆங்கிலர் காலத்திலும் அதன் பின்பும் நீண்ட காலமாகத் திரவிடர் கழகத்திலும் திரவிடர் முன்னேற்றக் கழகத்தி லும் துணைத்தலைவராகவிருந்து, தமிழுக்கு உண்மையான தொண்டு செய்துவந்த தூயதமிழரான பாவலர் கண்ணதாசனும் திரு. சம்பத் தும், திடுமென்று ஏற்பட்ட கட்சிப் பிணக்கினால் வேறொரு தமிழ்க் கட்சி யேற்படுத்துவதாக விலகிக்கொண்டு, பேராயக்கட்சியிற்சேர்ந்து குளித்தபின் சாய்கடையில் விழுவதுபோலும், உடன்பிறந்தார் மீதுள்ள பகையாற் பெற்ற தாயைக் கொல்வதுபோலும், தமிழுக்குக் கேடானவற்றைச் செய்துவருவது மிகமிக வருந்தத்தக்கதாகும். தி. மு. க. வை வெறுப்பது குற்றமன்று; அதற்கு மாறாக வேலை செய்வ தும் குற்றமன்று. தமிழை வெறுப்பதும் அதற்கு (தமிழுக்கு) மாறாக இந்தியை ஏற்பதுமே குற்றமாம். ஆதலால், இருவரும் விரைந்து பேராயக்கட்சியினின்று வெளியேறித் தமிழ்க்கட்சி தோற்றுவித்து வெற்றிபெறுக. இடையிட்டுத் தம் குருதியிற் படிந்த கறையைப் போக்கி, இறுதிக் காலத்திலேனும் தனித்தமிழ்த் தொண்டாற்றித் தம் தூய தமிழப் பிறப்பை நிலைநிறுத்துக.

பேராயக்கட்சி யாட்சியில் தமிழைக் காட்டிக்கொடுத்துத் தழைத் தோங்கிய வையாபுரியார், இன்றும் தம் பதவி நீங்காதிருப்பதும்

www.thamizham.net - Free E book No 7416

தன்மை மாறுதிருப்பதும், இற்றையாட்சியால் ஏற்பட்டதே. எதிர் காலத்தில் தமிழாட்சி ஏற்படும்போது, அவர் தமிழைக் காட்டிக் காட்டிக்கொடுத்து ஈட்டியதும் ஈட்டுகின்றதும் ஈட்டுவதுமான பொரு ளெல்லாம் பறிமுதல் செய்யப்படும் என்பதை அறிவாராக.

கொல் குறும்பு:

இன்று தமிழுக்குக் கொல்குறும்பாகவிருந்து ஊறுசெய்வார், தமிழை வெறுக்கும் பிராமணரும், இந்தியை இந்தியப் பொதுமொழி யாக்க முனையும் மொழி வெறியரும், தென்னிந்திய இந்திபரப்பற் கழகத்தாருமாவர்.

கடந்த மூவாயிரமாண்டாக ஆரியச் சூழ்ச்சி வெற்றிபெற்று வந்திருப்பினும், இனிமேல் அது செல்லாதவாறு தமிழர் கண் திறக் கப்பட்டிருப்பதை யுணர்ந்து, தமிழ்நாட்டுப் பிராமணர் ஊரொடு நாட்டொடு ஒத்துவாழ்ந்து "பிராமணனுக்குப் பின்மதி (புத்தி)" என்னும் பழமொழியை மெய்ப்பியாதிருப்பாராக. தமிழே தம் தாய் மொழியென வுணர்ந்து அதற்குத்தக அதனைப் போற்றிக் காப்பாராக.

தமிழைச்சமற்கிருதக் கிளைமொழியாகக் காட்டும் சென்னைப் பல் கலைக்கழகத் தமிழகரமுதலியைத் திருத்தி வெளியிடின், இந்தி வெறி யர் செருக்கெல்லாம் சூறுவளிப்பூளைபோல் மாய்ந்துவிடும். ஆயினும், இதை எத்துணையோமுறை எடுத்துச் சொல்லியும், நடுவணரசு தமி ழின் பெருமையையும் தலைமையையும் அறியும்வரை, தமிழ்நாட்டுத் தேசியப் படைமாணிப் பயிற்சியில் இந்தியேவற் சொற்களை எவ்வகை யிலேனும் வற்புறுத்தத்தான் செய்யுமென்பதை, இற்றைத் தி. மு. க. அரசு அறிதல் வேண்டும். மண்டெரி வாய்மடுப்பினும் கண்டுயிலும் மாசுணம் போற் கவலைகொள்ளாதிருக்கின்றது இற்றைத் தமிழ் நாட்டரசு. தமிழாட்சி வரும்வரை இத்திரவிட ஆட்சி இங்ஙன்தான் இருக்கும்போலும்!

சென்னையிலுள்ள தென்னிந்திய இந்திபரப்பற் கழகப்பூனை சென்ற இந்தியெதிர்ப்பிற் சூடுகண்டும், இன்னும் தன் நிலைமையை உணராதிருக்கின்றது. தென்னிந்திய மொழிகளில் தேர்வுகளை வட நாட்டிலும் தென்னுட்டிலும் நடத்திவிட்டால், தமிழர் இந்தியெதிர்ப்பு அடியோடுநின்றுவிடும் என்று அது கனுக்காண்கின்றது. "ஆடுநனை கிறதென்று ஓநாய் அழுததாம்". தமிழர்தமிழை ஊக்கவில்லையென்று, தமிழை ஒழிக்கக் கருதும் இந்திபரப்பற் கழகம் மிகவும் கவல்கின்

www.thamizham.net - Free E book No 7416

றது. இத்தகைய குருட்டுச் சூழ்ச்சிகளை அறவே விட்டுவிட்டுத் தமிழாட்சி வந்து கோடையிடிபோற் குமுறியிடிக்குமுன், தன் கடையைக் கட்டிச் சுருட்டிக்கொண்டு வடநாடு சென்று அங்குத் தமிழைப் பரப்பத் திட்டமிடுவதாக. அது தமிழ்நாட்டில் இருக்கும் வரை தமிழுக்குப் புற்றுநோய் பரப்பியாகக் கருதப்படுமென்பதையும், அறிவதாக.

உலகத் தமிழ்க் கழக நெறியீட்டுக் குழுவினர்க்கும் மாவட்டக் கிளைத் தலைவர்க்கும் அறிவிப்பு

உ. த. க. ஆட்சிக்குழுவின் முதற்கூட்டம், அடுத்துவரும் ஆடவை (ஆனி) மீ 22-ஆம் பக்கல் (6–7–'69) ஞாயிறு முற்பகல் கo-மணியிலிருந்து பிற்பகல் ௪-மணிவரை திருச்சி அாசினர் பேரியங்கி நிலையத்தை யடுத்த அசோகா உண்டிச்சாலையில் நடைபெறும்.

இது முதற்கூட்ட மாதலாலும்; கழக விரிவும் வேலையும் முதலாட்டை விழாவும், திருவள்ளுவர் ஈராயிரவாட்டை விழாவும், 'திருக்குறள் தமிழ் மரபுரை' வெளியீட்டு விழாவும், பற்றிய பல முதன்மையான செய்திகள் சூழ்ந்து முடிபு செய்யப்பட வேண்டியிருத்தலாலும், அனைவரும் தவறாது வருக நகரக்கிளைத் தலைவரும் இதிற் கலந்து கொள்ளலாம்.

நண்பகலுணவிற்குப்பின் அவரவர் ஊர் திரும்ப ஏந்தாயிருக்குமாறு கூட்டம் முற்பகலில் வைக்கப்பட்டுள்ளது.

எதிர்பாராத தடைபற்றி எவரேனும் வர இயலாவிடின், இயன்றவரை முற்பட, திருச்சி நகரக்கிளைத் தலைவர் திரு. அ. செல்லத்துரையார்க்குத் தெரிவித்து விடுக. அவர் முகவரி: 173, பெரிய கம்மாளத் தெரு. திருச்சி-8. வருவாரும் தெரிவிப்பது நன்றே.

குறிப்பு: நகரக்கிளை என்றது மாவட்டத் தலைநகரக் கிளையை.

ஞா. தேவநேயன்,
தலைவன், உ. த. க.

கிளைக்கழகங்கள் கவனிக்க.

உலகத் தமிழ்க் கழகத்தின் மாவட்ட, வட்ட, நகர, ஊர்க் கிளைகள் தங்கள் நடைமுறைச் செலவுகட்கும். விழா முதலியன நிகழ்த்துதற்கும் நன்கொடை தண்டுவதாயின் [உ. த. க. நெறிமுறையின் அ-ஆம் /விதி, 1-ஆம் பிரிவு, ஈ-உ உட்பிரிவுகளின் படி] தலைமைக் கழகத்தின் இசைவு பெற்றே அவ்வாறு செய்தல் வேண்டும் என்பது நினைவூட்டப்படுகின்றது.

பொதுச்செயலாளர், உலகத் தமிழ்க் கழகம்.

www.thamizham.net - Free E book No 7416

ஒன்பது ?- ஒரு கருத்துரை.

கொற்றன்குளம். இஸ. க. இரத்தினவேல்.

ஒன்பது என்னும் சொல்லின் உண்மையான பழம் சொல்லுரு என்னவென்பதைப் பற்றிப் பலரும் பலவகைக் கருத்துகளைக் கூறி யுள்ளனர். இக்கருத்துகளுட் சிலவற்றைக் கூறி, உண்மையான பழம் வடிவம் என்ன என்பதை நிலைநாட்ட எழுந்ததே இக்கட்டுரை

ஒல் + பது = ஒன்பது: ஒன்பது என்ற சொல்லை ஒல் + பது எனப் பகுத்து, "ஒன்பது என்பதற்கு, ஒன்று குறைந்த பத்து என்றே பொருள் (ஒல்-தொல்-தொள்-தொளை; தொளைபட்ட = குறைந்த, ஒன்று குறைந்த பத்து)" என அறுதியிடும் ஓர் ஆய்வா ளர், "பத்தில் ஒன்று குறைந்ததை ஒன்பது என்று சொன்ன தமி ழன், நூறில் ஒரு பத்துக்குறைந்த எண்ணை, தொண்ணூறு (தொள்-தொளைபட்ட-குறைபட்ட நூறு) என்றான்; அதே போல் ஒருநூறு குறைந்த ஆயிரத்தைத் தொள்ளாயிரம் என்றான்." என்று மேலும் வியந்து கூறுகிறார்.

இதன் மறுப்பு; பத்து என்ற எண்ணைத் தெளிந்த பின்தான். தமிழன் அதற்கு முந்தைய எண்ணைக் கண்டறிந்தான் என்னும் இக் கூற்று, அண்ணன் தம்பிக்கு இளையவன் என்னும் கூற்றை யொத் ததே! குறைபட்ட முதற்கருத்தின் (தொள்ளைப்பத்து)மேற் கட்டிய கட்டிடம் கோணலானது இயற்கையே!

இரண்டாவதாக, ஒல்-தொல்-தொள் எனத்தான் சொல்லமைப்பு உருவாகும்; தொள்-தொல்-ஒல் எனவன்று. எனவே, 'ஒல்' என்ற வேர்கொண்ட சொல் 'ஒன்பது', 'தொன்பது' என ஆகலாம்; ஆயின் தொள் என்ற வேர் 'தொண்பது' என்றாகுமே யன்றி, பின்னோக்கி ஒன்பது எனவாவது இயற்கையோடியைந்ததாய் இல்லை.

மூன்றாவதாக, ஒலிவடிவு தோன்றி, சொல்வடிவு உருப்பெற்று, மிகவும் வழக்குற்ற பின்தான் வரிவடிவு—அதிலும் எண்வரிவடிவு இன் னும் பின்னரே தான்—அமைக்க முயன்றிருப்பர். எனவே, திருவாளர் பாலகணபதியார் கூறுவதைப்போல்[1] வரிவடிவக் குறியீடுகளை வேண்டுமென்றால் முன் னுக்குப் பின்னாக [,(9 ஒன்பது), பத்து (ൻ)க் குறைந்த ஒன்று என்பதற்காகத் தலைகீழ்ப்பத்தில் ஒன்றையிடல் (൯) போல்] அமைத்திருக்கலாம். ஆனால் சொல்வடிவு அங்ஙனம் முன் பின்னாக அமையாது.

---

1. தமிழ் எண்களின் உருவ விளக்கம்—கலைக்கதிர்; மார்ச்சு, ஏப்பிரல், மே 68.

www.thamizham.net - Free E book No 7416

இவ்வேதுக்களான் தொள்ளாப்பத்து ஒன்பது ஆயிற்றென்னும் பொருள் கோடலின் இயலாமை காட்டப்பட்டது. (ஆயினும் பத்தாம் இடத்திலிருந்த தொண்பது, ஒன்றும் இடத்துக்கு இறங்கி ஒன்பது எனவாயிற்றென்பது பின்னர்க் காட்டப்பெறும்) பிறமொழி எண் மான முறைகளை உலக முதல் மொழியான தமிழுக்கும் பொருத்திக் காட்டுவதால் ஏற்படும் மயக்கமே, இது.

ஒன்பதே அன்று! பின்?; இனி, ஒன்பது என்னும் சொல்லமைப் பைக் காணலாம். முதற் பத்து எண்களின் பெயரீட்டு முறையில் ஒன்பதைத் தவிர்த்த பிறவெல்லாம், உகரவீற்று மாச்சீராக அள வொத்து, இயல்பாக, தமிழுக்கே உரிய அழகுடனும் அணியுடனும் திகழ, தளைதட்டுவதைப்போல் இவ்வொன்பது மட்டும் உகரவீற்று விளச்சீராக அமைந்துள்ளதென்னை? அம்மட்டுமின்றி இதன் ஈற்றசை, முன்னுள்ள யாவற்றுக்கும் முரணி, புதுவதாய்ப் 'பது' என முடிகி றது. ஆதலால் 9-ஐச் சுட்டியது ஒன்பது அன்றெனவும், இஃதொரு வழக்கிடைச் செருகலாக விளங்குகிறது என்பதையும் தெளியலாம்.

ஒன்பது என்னும் இச்சொல் தொல்காப்பியர் காலந்தொட்டே (கி. மு. ஏழாம் நூற்றுண்டு) வழங்கி வருகிறது. எட்டுக்கடுத்த எண்ணை ஒன்பது என்னுஞ் சொல்லாற் குறித்து,

ஒன்பது + பஃது = தொண்ணூறு [2] எனப் பெரும் பேராசிரியர் தொல்காப்பியனுர் கூட்டிய புணர்ச்சிநெறி எவ்வளவு வலிந்ததாய், செயற்கையாய் உள்ளது!

எட்டுக்கு அடுத்த சொல் 'ஒன்பது' அன்றுயின் சரியான சொல் தான் எது? தொல்காப்பியரே பிறிதோரிடத்தில் கூறுகிறுர்.

தொண்டு தலையிட்ட பத்துக்குறை யெழுநூற்று (தொல்:1358) என்று.

மேலும்,

தொடித்திரித் தன்ன தொண்டுபடு திவவின் (மலைபடுகடாம் 21)

2. ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும், முந்தை யொற்றே ணகாரம் இரட்டும், பஃதென் கிளவி ஆய்தபக ரங்கெட, நிற் றல் வேண்டும் ஊகாரக் கிளவி, ஒற்றிய தகரம் றகர மாகும்.
—தொல். எழுத்து: சசகூ

www.thamizham.net - Free E book No 7416

தொண்டுபடு திவவின் முண்டக நல்யாழ் (சிலப்பதிகாரம் குறிப்புரை)

என்றும், இன்னும் விளக்கமாக

ஆறெனா; ஏழெனா எட்டெனா தொண்டெனா (பரிபாடல் 3: 79)

பண்டே நிலவியது இத் 'தொண்டு' என்னும் சொல். எனவே, எட்டுக்கும் பத்துக்கும் இடையிட்ட எண் (கூ-9) முந்துநூல்களிற் பெரிதும் பயின்று வந்த தொண்டு என்பதே. 'ஒன்பது'க்குக் கிளந்த தடைகளைத் தொண்டுக்குக் கிளந்தும், ஏனையவற்றுடன் புணர்த்தியும் புடமிட்டு இச் சொல்லின் திண்மையை ஓர்க.

தொண்டு—சொல்லாய்வு: இனி, தொண்டு என்பதன் சொல்லாய்வைக் காணப் புகுவம்: தொண்டு ≈ தொள் + து எனவும், பின்னோக்கி ஒள் (தொள்) + து எனவும் பிரிக்கின்றனர்.

ஒள் (தொள்) + து—ஒட்டு, தொட்டு தொடர் எனக்கொண்டு, எட்டையும் பத்தையும் தொடர்பு படுத்துவது, எண்பதையும் நூறையும் தொடர்பு படுத்துவது, எண்ணூறையும் ஆயிரத்தையும் தொடர்பு படுத்துவது எனக் கூறப்பட்டதை, "எந்தச்சொல்லையும் எடை போட்டதுபோல் நம் முன்னோர் அமைத்திருக்க, இதனில் இவ்வாறு ஒட்டுப் பிழைப்பா செய்திருப்பர்?" எனப் புலவர் நடவரசனார்[3] சரியாக வெட்டி விடுகிறார்.

ஒரு கை விரல் ஐந்து என்பதிலிருந்து கை—ஐ-ஐது—ஐந்து என இயற்கையோடியைந்து உருவான சொன்மொழியில், இங்ஙனம் செயற்கையாய் இருத்தல் ஒல்லுமோ? 'பல் + து(பஃது—பத்து) என்பதன் நிலைமொழியாகிய பல் என்பது, இதற்குமுன் 9 வரையும் உள்ள ஓர் இலக்க எண்ணை விட்டு ஈரிலக்கம் முதற்கொண்ட பல இலக்கங்களை இனிப் பெறப்போவதால், அதன் அடிப்படையான ஈரிலக்கத்துக்கே பல் என்ற பெயர் சூட்டிய திறமிக்க தமிழன் இங்ஙனம் ஒட்டு வேலை செய்திருக்க ஏலாது எனக்கோடல் பொருத்தமே!

தொள் என்ற சொல்லின் தோற்றம், ஒல்—தொல்—தொள் எனக் கொண்டு, "தொல், தொல்லை என்பன முறையே பழமை, முன்னுள்ளது என்னும் பொருளைத் தருவதாகும். பத்துக்கு முன்னுள்ளதை, நம் முன்னோர் தொண்டு என்று குறித்தமை சாலவும் பொருந்தும்" எனப் புகல்கிறார் புலவர் ஒருவர்.

---

3 ஒன்பது—தமிழ்ப்பொழில்: துணர் கூ அ. ப. 95. (1962-சூலை)

www.thamizham.net - Free E book No 7416

இன்னொருவர், நூறைத் தொடுவது தொண்ணூறென்றும், ஆயிரத்தைத் தொடுவது தொள்ளாயிரம் என்றும் கொள்ள, 'தொள்' என்றும் முதனிலையைப் பிரிந்துரைத்தார். இஃதும் 'ஒட்டு'க் குறை பாடுடையதே! பின்னும் இற்றை 9(க)-க்கு இதன் முதனிலையைத் திரிக்காமல் இயல்பு காட்ட முடியாது.

தொடக்கத்திற் குறித்த ஆய்வாளர் போன்றே மேற்குறித்த இருவரும் வழுவினும், இவர்கள் சுட்டும் வேர்ச்சொல் செவ்வியதாகவே உள்ளது.

இங்ஙனம் தொள்—தொண்டு என்னும் வேர்ச்சொல்லைக் கண்டும் குன்றுமுட்டிய குரீஇப் போலவும் குறிச்சிபுக்க மான்போலவும் பலர் இடர்ப்படுவதற்குக் கரணியம், தொல்காப்பியர் வகுத்த புணர்ச்சி நெறியை வழாஅது கைக்கொண்டமையே யாம்.

'எட்டனொற்றே ணகார மாகும்' (தொல்: எழுத்து ௪௪௪) என முன்னுள்ளவற்றுக்கெல்லாம் மிகத் தெளிவாகவும் சுருக்கமாகவும் நுண்மாணுழைபுலத்துடன் கூறும் ஒல்காப் பெரும்புகழ்த் தொல் காப்பியரிடம் எதிர்நோக்கக் கூடியது, 90, 900க்கு உரிய நூற்பா. வாக 'தொண்டன் குற்றுகரம் மெய்யொடுங் கெடுமே' என்னும் பொருள் அமைந்ததையே! ஆயின் ஆசிரியர் காலத்தில் 'தொண்டு' அருகியும் ஒன்பது பெருகியும் வழக்கில் இருந்ததனால்,

ஒன்பது + நூறு = தொள்ளாயிரம்[4] என இலக்கணம் வகுத்தது இயற்கைக்கு மாறாய் எவ்வளவு திரிந்துள்ளது பார்மின்!

---

4. ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே
முந்தை யொற்றே ளகாரம் இரட்டும்
நூறென் கிளவி நகார மெய்கெட
ஊஆ வாகும் இயற்கைத் தென்ப
ஆயிடை வருதல் இகார ரகாரம்
ஈறுமெய் கெடுத்து மகர மொற்றும்.

(தொல். எழுத்து: ௪௬௩)

www.thamizham.net - Free E book No 7416

பாவாணர்கருத்து: இனி இற்றை மொழிநூற் பெரும்புலவரான தேவநேயனார்[5] கூறுவதைக் காணலாம்:

ஒன்பதுக்கு முதலாவது வழங்கிய பெயர் தொண்டு என்பதே.

தொள்-தொண்டு-தொளை. மாந்தன் உடம்பில் ஒன்பது தொளை யிருத்தலால் தொளைப் பெயர் அதன் தொகைப் பெயராயிற்று. தொண்டு என்னும் சொல் தொல்காப்பியர் காலத்திலேயே வழக்கற்றுப் போய்விட்டது; போகவே, அஃதிருந்த ஒன்றும் இடத்துக்குத தொன்பது (ஒன்பது) என்னும் இரண்டாம் இடப்பெயரும், இரண்டாம் இடத்துக்குத் தொண்ணூறு என்னும் மூன்றும் இடப்பெயரும், மூன்றும் இடத்துக்குத் தொள்ளாயிரம் என்னும் நாலாம் இடப்பெயரும் வந்து வழங்குகின்றன. நாலாம் இடப்பெயருக்கு மேலிடச்சொல் இன்மையால், தொண்பது என்பதன் திரிபான ஒன்பது என்னுஞ் சொல்லொடு ஆயிரம் என்பதைச் சேர்த்து ஒன்பதாயிரம் அல்லது ஒன்பதினாயிரம் என்று சொல்ல வேண்டியதாயிற்று.

ஒன்று முதல் பத்துவரை யுள்ள பெயர்களெல்லாம் தனிச் சொல்லாயிருப்பதையும் ஒன்பது என்பது கூட்டுச்சொல்லாயும், பது (பத்து) என்று முடிவதாயும் இருப்பதை நோக்குக.

மேற்குறித்த கூற்றுப்படியான பட்டியலைக் கீழே காண்க:

இற்றை வழக்கு	எண்	பாவாணர் கூற்றுப்படி பண்டைவழக்கு	
ஒன்பது	9	தொண்டு	(தொள் + து)
தொண்ணூறு	90	தொண்பது	(தொண்டு + பத்து)
தொள்ளாயிரம்	900	தொண்ணூறு	(தொண்டு + நூறு)
ஒன்பதாயிரம்	9000	தொள்ளாயிரம்	(தொண்டு + ஆயிரம்)

தொல்காப்பியரின் புணர்ச்சிநெறியை நோக்க, தொண்டு என்னும் சொல்லால் கொண்ட இப்புணர்ச்சி முறை யாவற்றுட்னும் எளிதாய் இயைந்து, எத்துணை இனிதாக அழகாகத் திகழ்கிறது!

தொண்டு என்னும் இவ்வழக்கு, பண்டே நிலவியிருந்து, தமிழில் வழக்கிறந்திருப்பின், தமிழிலிருந்து கிளைத்த பழந்திரவிட மொழிகள் ஏதாவதொன்றுள் வழங்கக்கூடுமல்லவா? நீலமலைப் படுகர் பேசும் பழங்கன்னட மொழியின் எண் முறையை எடுத்தெழுதி இக்

5. தமிழ் வரலாறு. ப. 149.

கருத்துக்கு அரண் செய்கிறார் திருவாளர் த. மேகவரசு [6]

பழந்திரவிடத்தில் சான்று: படுகு மொழியின் எண் குறித்த சொற்கள் தமிழுடன் பெரிதும் ஒத்துள்ளன [7]. அதன் பத்தாம் இடப் பெயர்களுள் 90, தொம்பத்து (தொண்டு+பத்து=தொண்பத்து–தொம்பத்து) என வழங்கப்பெறுவது பாவாணரின் கருத்தை வலியுறுத்தும் எனக் கூறுகிறார் மேகவரசு.

பாவாணர் ஆய்வுக்கும் படுகுமொழிச் சொற்களுக்கும் உள்ள ஒப்புமையைக் கீழே காண்மின் பாவாணர் கூற்றுப்படி

இற்றைவழக்கு	எண்	படுகு	பழஞ்சொல்
ஒன்பது	9	ஒம்பத்து	தொண்டு
தொண்ணூறு	90	தொம்பத்து	தொண்பது
தொள்ளாயிரம்	900	ஒம்பே நூறு	தொண்ணூறு
ஒன்பதாயிரம்	9000	ஒப்பத்துகாவிர	தொள்ளாயிரம்

தொண்பது (90), தொம்பத்து என வழங்கும் இம்மொழியிலும் 9 க்குரிய சொல் தமிழிற்றிரிந்தது போலவே ஒம்பத்து எனத் திரிபுற்றது; ஆயினும் 9×100, 9×1000 என்பவற்றைச் சுட்டும் ஒம்பே நூறு (900–தொண்ணூறு) ஒப்பத்துகாவிர (9000–தொள்ளாயிரம்) என்பவற்றின்ஈறு தமிழ்ச்சொல்லுடன் ஒத்து, பழம்வடிவைச் சுட்டி, பாவாணரின் கருத்தை வலியுறுத்தல் காண்க.

"தொண்டு"வே சரியான சொல்: ஒன்பது என்ற சொல்லை விட, தொண்டு என்ற சொல்லில்தான் மிகுந்த முறை இருக்கிறது; ஆம்-அளவைநூல் முறைமை தெளிவாக இருக்கிறது. இத்தகைய சிறந்த சொல் தமிழில் மறைந்து (மறைக்கப்பட்டு?) விட்டது. இவ் விழுமிய பயனுடைய சொல்லை விட்டுவிட்டு, ஒன்பது என்னும் பிற்றை வடிவத்தைக் காட்டி, அதன் அழகிலேயே மயங்கி, தமிழின் சிறப்பை

---

6. ஒன்பது என்னும் சொல்–செந்தமிழ்ச்செல்வி:சிலம்பு சஅ ப கஉ (ஒற்றோபர் 68)

7.

படுகு	எண்	இற்றைத்தமிழ்	படுகு	எண்	இற்றைத்தமிழ்
ஹத்து	10	பத்து	அறவத்து	60	அறுபது
இப்பத்து	20	இருபது	எளவத்து	70	எழுபது
மூவத்து	30	முப்பது	எம்பத்து	80	எண்பது
நலவத்து	40	நாற்பது	தொம்பத்து	90	தொண்ணூறு
ஐவத்து	50	ஐம்பது			

www.thamizham.net - Free E book No 7416

அதன்வழிக் கூறுதல், சதுப்பு நிலத்தில் வியக்கத்தக்க வளமனை கட்டியதையே ஒக்கும்.

“இன்று விழித்தோம்; இனியேனும் செந்தமிழை நன்முகப் பேணிவர நாம் முனைந்து” எட்டுக்கும் பத்துக்கும் இடையிட்ட எண்ணுக்குத் தொண்டு என்ற சொல்வழக்காற்றை மீண்டும் பயன்படுத்திப் பெருமை பெறுவோம்.

முடிபுரை: ஒன்பது என்பதை தொள்+பது, தொல்+பது, ஒள் (ஒல்)+பது) எனப்பிரித்து, முறையே தொளைபட்ட பத்து எனவும், பத்துக்கு முன்னுள்ளது எனவும், எட்டையும் பத்தையும் ஒட்டுவிப்பது எனவும் கூறியன யாவும் முறையே முழுச் செயற்கையாகவும் அரைச்செயற்கை யாகவும், முக்காற் செயற்கையாகவும் இருக்கிறதெனக் காட்டி, தொண்டு என்ற சொல்லே 9 (௯) க்கு வழங்கிய வடிவம் என்பதை, தொள்+து எனக் கொண்டு 'மாந்தன் உடம்பில் உள்ள தொளைப்பெயர் அதன் தொகைப் பெயர் ஆயிற்று' என்னும் பாவாணர் கருத்தை யேற்று, இத்தொண்டு ஒன்றுமுதல் பத்துவரை உள்ள சொற்களுடன் அளவொத்து, புணர்ச்சி நெறிக்கு மிக்க இயைந்ததென்பதூஉம், தமிழினின்று கிளைத்த பழந்திரவிட மொழியான படுகுவில் இன்றும் இவ்வழக்காறு உண்டென்பதூஉம் ஆய்வாளர்களின் உரைகளால் எடுத்துக்காட்டி, ஒன்பதை விலக்கித் தொண்டைக் கைக்கொள்ள வேண்டுகிறது, இக்கட்டுரை.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

தென்மொழி-கடலூர்-1.

[உலகத் தமிழ்க் கழகச் செய்திகள் முழுமையாகத் தொடர்ந்து வரும் ஒரே இதழ்]

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு.
ஆண்டுக்கட்டணம்:	9 உருபா.	10-50 உருபா.	13 உருபா
தனிஇதழ்:	75 காசு.	90 காசு.	1 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.
ஓரிதழுக்கு ஓர் உருபா 50காசு முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

---

www.thamizham.net - Free E book No 7416

இயற்கைப் புனைவாளர்கள்.

(Architects in Nature)

சாமுவேல் ஆபிரகாம், விலங்கியற்றுறைத் தலைவர்
அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

தற்காலக் கொத்தர்கள் பல உருவங்களையும் பல அளவுகளையும் உடைய புக்கில்களைப் புனைந்துள்ளனர். அவற்றிற் சில பெரிய தீப் பெட்டிகளை அடுக்கி வைத்தாற்போல் தோன்றினும், அவற்றை மக்கள் கண்ணாற் பருகி மகிழ்கின்றனர்; புகழ்கின்றனர். ஆனால், மக்கள் கையினாற் கவின்பெற அமைக்கப்பெறும் கட்டிடங்களைவிட, இயற்கையன்னையின் பிள்ளைகளான பல விலங்குகளும், இலங்கு பறவைகளும் பல்லாயிரமாண்டுகளாக அமைத்துள்ள அழகான இல்லங்களைக் கண்டு மகிழ்வார் யாருளர்? அவற்றிற் சில குமுகாய வாழ்க்கையிலீடுபட்டு மாடி வீடுகளையும், அவற்றினுள்ளே காளான் தோட்டங்களையும் அமைத்து வாழ்க்கை நடாத்தி வருவது போற்றத் தக்கது; மக்கள் பார்த்துப் புகழத்தக்கது. மக்களாலும் சில விலங்குகளைப்போல நுணுக்கமாகவும் துல்லியமாகவும் வீடமைப்பது கைக்கூடாதது என்றே கொள்ளவேண்டியுள்ளது. ஆகையினாற்றான்,

"வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கரையான்
தேன்சிலந்தி யாவர்க்கும் செய்வரிதாம்"

என்ற பழமொழியை நம் முன்னோர் நவின்றனர் போலும்!

உயிரிகளிலே மிக்க வியப்பான உறைவிடங்களை உண்டு பண்ணுவன புள்ளினமே யென்றால் அது மிகையாகாது. எடுத்துக்காட்டாக, நெய்யும் குருவி அல்லது தூக்கணாங்குருவியின் கூட்டைப் பற்றி நாம் சற்று கருதுவோம். தென்னையோலையிலிருந்து ஞாலும் குருவியின்கூடு ஞாலமே போற்றும் அமைப்புப் பெற்றுள்ளது. இப் புள்ளின் கூடு ஆய்வுக்களங்களில் பயன்படும் வாலைவடிவமான (retort) குழாயைப் போன்றது. மிக்க வேலைப்பாடுள்ளது. தென்னையோலையின் நீண்ட சிம்புகளாலும் புல்லாலும் புனையப்பட்டது. இக் குருவி எவ்வாறு படிப்படியாகக் கூண்டை உருவாக்குகிறது என்பது, அதை உற்றுநோக்கியவர்களுக்கே தெரியவரும். இவ்வீட்டின் வாயில் கீழ்நோக்கியுள்ளது. இளம் தூக்கணாங்குருவிகள் இனப்பெருக்கப்பருவம் வருமுன்னரே தமது கூட்டைக் கட்டுகின்றன. ஆனால் அவை சரியான நிலையில்லாவிடில் அக்கூட்டைப் பறவைகள் அரைகுறையாகவே விட்டுவிடுகின்றன. முற்றுப்பெறுக் கூடுகளும் பிறகூடுகளுக்கிடையிற் காணப்படுகின்றன. இக் கூடமைக்கும் வேலையில் ஆண்மாத்திரம் ஈடுபடுகிறது. ஒரே ஆண்குருவிக்குப் பல

www.thamizham.net - Free E book No 7416

கூடுகளும் மனைவியரும்! சிறு களிமண் உருண்டைகளைத் தமது கூண்டுகளுக்குள்ளே வைத்துக்கொள்ளுகின்றன. அக்களிமண்ணில் மின்னும் பூச்சியையும் இப்புட்கள் வைத்துக்கொள்கின்றன என்று சொல்லப்படுகிறது. ஆனால் இதைப்பற்றி முரணான கருத்து நிலவுகிறது.

ஆப்பிரிக்காவின் குமுகாய செய்யும் பறவைகளின் (Sociable Weaver Birds) கூடு கன்னெஞ்சனின் கருத்தையும் கவரக் கூடியது. நூறுமுதல் முந்நூறு பறவைகள் ஒன்றாகக்கூடிப் பின்னிப் பிணைக்கப்பட்ட ஒருபெரிய கூட்டு உறைவிடத்தை உருவாக்குகின்றன. பெரியமரத்தின் கிளைகளைச் சுற்றிலும் அமைந்துள்ள இக் குமுகாயக் கூடுகள் அகன்ற குடைக்காளான்கள் போலத் தோற்றமளிக்கின்றன. இக்குமுகாயக் கூடுள்ள ஒருமரம், அந்நாட்டின் நாகரிகமில்லாக் குடிகளின் குடிசையைத் துளைத்து, அதன் கூரையைத் தூக்கிக்கொண்டு நிற்பதுபோலத் தோன்றும் என்கிறார்கள். இக் கூட்டை யமைக்க பல வண்டிகளில் ஏற்றும் அளவான புல் முதலியன தேவைப்படலாம். கூட்டைக் கீழிருந்து நோக்குவோமானால் அதன் தட்டையான கீழ்ப்பாகத்தில் பறவைகள் உட்புகும் துளைகள் தென்படும். மாந்தனிடத்தும் இவ்வொற்றுமையும் உழைப்பும் காணப்படுங்கொல்!

ஆத்திரேலியாவிற் காணப்படும் "முடுபாதைப் பறவைகள்" (Bower Birds) பல வகைப்படுவன; பல வண்ண முடையன. இவற்றில் நியூகினியா தோட்டக்காரப் பறவை (New Guinea Gardener Bird) ஒரு மரத்தடியில் ஈரடி உயரமுள்ள ஒரு குடிசையமைக்கிறது. அதன் கூரை ஆர்க்கிட் என்ற (மிக அழகான பூக்களைக்கொண்ட, அனைத்துலகப் புகழ்பெற்ற) ஒரு செடியின் தண்டுகளாலானது. இத் தண்டுகள் சரிவாக அமைக்கப்படுகின்றன. இக்கூரைக்கு ஊன்றுகோலாக நடுக்காலும் உண்டு. இந்நடுவண் ஊன்றுகோல் நுண்பாசியால் மூடப்படுகிறது. அதைச் சுற்றிலும் படிமேடையும் உண்டு. இச் சிறுகுடில் ஒருபக்கம் திறந்திருக்கும். திறந்த பக்கத்தின் முன்னால் பச்சைநிறப் பாசியும் (Moss) அடுக்கப்படுகிறது. அழகிய பூக்களாலும் பன்னிற நுண்பழங்களாலும் அணிசெய்யப்படுகிறது. அவை சற்று வாடிவிட்டால் குடிசைக்குப் பின்னால் உள்ள குவியலில் எறியப்படும்; புதியபூக்களும் புதுக்கனிகளும் கொண்டுவரப்படும். வட்டவடிவக் குடிசை 18 விரற்கடை ஆரம் உள்ளது. இக் குடிசை ஓரிணைப் பறவைகளின் வேலையா அல்லது ஆண்பறவையின் வேலையா என்பது திட்டமாகத் தெரியவில்லை. ஆறறிவு பெற்ற மாந்தரினத்திலும்கூட, ஓராடவன் [தன் காதலியைச் சந்திக்கத் தன் புக்

www.thamizham.net - Free E book No 7416

கில்லை ஆண் "பவர்" பறவையைப் போலத் திறம்பட ஒப்பனை செய்து வைக்கின்றனரோ? இன்னோர் இனத்தைச் சேர்ந்த "முடுபாதை புண்டாக்கும் பறவை" தன்குடிசையின் தரையையும் பாசியாலும் பன்னத்தாலும் (Fern) அணிசெய்கிறது. இப்பறவை 6 அடிமுதல் 8 அடி வரை நீளமுள்ள பாதையை மேற்கூறியவாறு கவினுறச் செய்து தன் காதலியின் கருத்தைக் கவர்கிறது.

இனி வெள்ளைக்கரையான் (White Ants or Termites) ஒள்ளிய ஒடுக்கிடம் பற்றி ஓர்வோம். கரையான் (சிலர் இப்பூச்சியைச் "செல்" என்றழைப்பார்கள்) மிக வியக்கத்தக்க உயிரியாகும். தென்னாட்டிலே காணப்படும் கரையான் (Cyclotermes Obessus) புற்று தரைமட்டத்திலிருந்து ஐந்து முதல் ஏழடிவரை உயரமுள்ளது. சிறு கோபுரம்போல் காட்சியளிக்கும். அதன் மையத்தில் வட்டமான பாகம் உண்டு. அப்பாகத்தைத் தாங்க, பக்கத் துணைத் தூண்கள் போன்ற பாகங்களும் உண்டு. இச்சுவர் தாங்கிகள் பைஞ்சுதையைப்போல் உறுதியானவை. மூட்டுப்போலிருக்கும் சுவர் தாங்கிகளிலே துளை ஒன்றுமே கிடையாது. கரையான்கள் வசிக்கும் அறைகளும் மற்ற எல்லா ஏந்துகளும் தரைமட்டத்துக்குக் கீழே உள்ள பாகத்தில் உள. ஆண்டு, ஒரு பெரிய அறையுண்டு. இது முற்றுப்பெருத் தடுப்புச் சுவர்களை யுடையது. இதுதான் முழுக் குடியேற்றத்திற்கும் உணவுதரும் காளான்தோட்டம் (Fungus Garden) எனப்படும். சில சமயங்களில் இவ்வறை மேன்மாடி, கீழ் மாடி என இருபாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கும். காளான் தோட்டத்திற்குச் சற்று அப்பால் அரசன் அரசி வசிக்கும் ஓர் அறையுண்டு. இவ்வறை அண்டம் அல்லது முட்டை வடிவம் உடையது. இதன் முகடு விரித்த கவிகை (dome) போலுள்ளது. இவ்வறையில் அரசனும் அரசியும் அடைக்கப் படுகின்றனர். பல நுண் துளைகள் வழியே வேலைக்காரக்கரையான்கள் அரசனுக்கும் அரசிக்கும் உணவளிக்கின்றன. அரசியிட்ட முட்டைகளை வேறிடத்திற்கு அகற்றுகின்றன. அரசனது இருப்பிடம் ஏறக்குறையத் தரைமட்டத்தில் அமைக்கப்படுகிறது. தற்காலக் கட்டிடக் கலைஞர்கள் வெயில் காலத்திலும் குளிர்காலத்திலும் வீட்டினுள் ஓர் குறிப்பிட்ட வெப்ப தட்ப நிலையிருக்கும்படி ஏற்பாடு (Air Condition) செய்கிறார்கள். கரையான் கட்டிடக் கலைஞர்களும் இத்துறையில் கவனம் செலுத்துகிறார்கள்! உள்ளே இருக்கும் வளியில் குறிப்பிட்ட அளவுள்ள ஈரம் இருக்கும்படி கரையானின் இல்லம் அமைக்கப்பட்டுள்ளது. புற்றின் உள்ளே இருக்கும் அறைகளின் சுவர் ஈரத்தை மிகுதியாக உறிஞ்சுகின்றது, வெளிச்சுவர்கள் உட்சுவர்களின் ஈரத்தைக் கொஞ்சமாக உறிஞ்சுகின்றன.

www.thamizham.net - Free E book No 7416

உலகிலேயே மிகவும் மெச்சத்தக்க கரையான்கள், ஆத்திரேலியா வின் வடபாகத்திலுள்ள 'டார்வின்' துறைமுகத்திற்குத் தெற்கே இருக்கும் அகன்ற பகுதியொன்றில் வசிக்கின்றன. இவை ஆங்கிலத்தில் (Amitermes meridionalis) என்று அழைக்கப்படுகின்றன. பூச்சிக்கொத்தர்களில் இவை தலைசிறந்தவை எனலாம். ஏனெனில் ஆப்பு உருவில் (Wedge shaped) அமைக்கப்பெறும் இவற்றின் இல்லம் ஈராறு அடி உயரமும் ஈரைந்து அடி நீளமும் உள்ளது. இவ்வில்லம் எப்போதும் தெற்கு வடக்காக அமைந்திருத்தலால் இது திசைகாட்டி மேடு [Compass Mount] என்றும் அழைக்கப்படும். இவ்வாறு தெற்கு-வடக்காக இக்கரையான் புற்று இருப்பது விளங்காத புதிராக இருந்தது. அங்கு அடிக்கும் கடுமையான சூடுடைய காற்று, ஆப்புபோல் அமைந்திருக்கும் புற்றின் குறுகியபாகத்தின்மேற்படும்போது, புற்றுக்கோ அதில் வசிப்பனவற்றுக்கோ யாதொரு ஊறும் விளைக்காதவாறு அது காக்கப்படுகிறதென்பர் ஒரு சாரார். ஆனால் அங்கு அடிக்கும் காற்று தென்வடலாகவோ அல்லது கீழ் மேலாகவோ அடிக்காமல் குறிப்பிட்ட கோணத்தில் அடிக்கிறது என்கிறார்கள். ஆகையால் மேற்சொன்ன காரணத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, உயிர்நூல் வல்லுநர் "திசைகாட்டிக் கரையான்புற்று" தென்வடலாக அமைவதற்குக் காரணம் புற்று விரைவில் உலர்வதற்கேயாம் என்றுரைக்கின்றனர். இப்புற்றின் இன்னொரு புதுமை என்னவென்றால் இதன் பக்கங்கள் செங்குத்தாக இருப்பதில்லை. இதன் கிழக்குப்பக்கம் குழிந்தும் மேற்குப்பக்கம் குவிந்தும் உள்ளன. இதன் காரணம் இன்னும் தெரியவில்லை.

அறுகாலியாகிய தேனியின் ஆறுபக்கங்களுள்ள அழகிய சிற்றறைகளை அறியாதார் யாருளர்? அவ்வாறு பக்கங்களை அளந்து அறைகளை அமைத்தல் நமக்கு வியப்புண்டாக்கும். ஒரு சமயத்தில் பிரான்சு அறிவியலறிஞரான ரீமர் (Reaumear) என்பார் துல்லிய அளவுக்கு எடுத்துக்காட்டாகத் தேனீக்களைக் கூறலாம் என்றார். அவர் ஓர் நுண்வினைஞனைக் கூப்பிட்டுத் தேனீக்களை வைக்க, செயற்கை அடிப்படைத் தேனடை (Foundation Comb) யைச் செய்யப்பணித்தார். அவ்வாறே செயற்கைத் தேனடை செய்து கூண்டில் வைக்கப்பட்டது ஆனால், தேனீக்கள் செயற்கைத் தேனடையில் அமர மறுத்தன. காரணம்? செயற்கைத் தேனடையை இயற்கைத் தேனடையுடன் ஒப்பிட்ட போது அவற்றின் அளவிலே ஒரு விரற்கடையில் ஆயிரத்தில் ஒருபங்கு வேறுபாடு இருப்பதாகக் கண்டறிந்தனர்! "இடம்பட

www.thamizham.net - Free E book No 7416

வீடெடேல்" என்ற நம் முன்னோர் மொழிக்கிணங்க, சிற்றறை களுக்கிடையே சிறிதளவும் இடமில்லாமற் சிக்கனம், உறுதி இவையிரண்டும் உடையனவாய அவ்வறைகள் அமையவேண்டு மாதலால் சமபக்க முக்கோணம், சமசதுரம் அல்லது ஆறுபக்க முடைய உருவத்திற்றான் அறைகள் கட்டப்பட வேண்டும். இவற்றுள் தேனீ ஆறுபக்க உருவத்தைத் தெரிந்துகொண்டுள்ளது. தேனடையை ஓர் வானளாவும் மாடமாளிகைக்கு ஒப்பிடலாம்! குறிப்பிட்ட அளவுள்ள ஒவ்வொரு சிற்றறையும் மற்றவற்றுடன் ஒரு குறிப்பிட்ட அளவில் பொருத்தப்பட்டுள்ளது. இல்லாவிட்டால் அதிலுள்ள தேன் சிந்திவிடுமல்லவா? தேனடையின் சிற்றறைகளின் சுவர் மிக மெல்லியதாக (1/500 விரற்கடையாக) இருந்தாலும் ஒரு சிறுகல் எடையுள்ள தேனடை ஏறக்குறைய பதினைந்து சிறுகல் எடையுள்ள தேனைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்கிறார்கள். ஒவ்வொரு சிற்றறையிலும், ஓர் ஆறு பக்கப் பட்டையுருட்டும், அதன் கூரையாகிய மூன்று சிறு சாய்வுச் சதுரங்களுள்ள (Rhombus) பட்டைக்கூம்புகளும் (Pyramids) உள. ஒவ்வொரு பாகமும் மற்றப் பாகத்தோடு சரியாகக் குறிப்பிட்ட கோணத்தில் பொருத்தப்பட வேண்டும். இக் கோணங்களைக் கணிக்கப் பிரான்சு நாட்டுப் புகழ்வாய்ந்த கானிக் (Konig) என்னும் கணித வல்லுநரைப் பணித்தார். ஆனால் அவர் அக்கோணங்களைச் சரியாகக் கணிக்கவில்லை. ஆயினும், பல்லாயிரமாண்டுகளாகத் தேனீக்கள் அக்கோணங்களைக் கசடறக் கணித்துப் பாகங்களை ஒன்றோடொன்று பொருத்திச் சிற்றறைகளைத் திறம்பட அமைக்கும் கொத்தர்களாகத் திகழ்ந்துள்ளன. தேனீக்களின் வடிவகணித (Geometry) அறிவும், அவற்றின் பொறியியல் நுட்பமும் போற்றிப் பாராட்டுதற்குரியவையன்றோ!

பழமொழியிற் சொல்லப்பட்ட வல்லரக்குப்பூச்சி கொத்தனன்று முட்டையிலிருந்து வேற்றின உயிராக வெளியேறிய பின்னர் இப்பூச்சி, தன்னுடலிலிருந்து பிசின்போன்ற பாய்மத்தைச் சுரந்து, வாய், மலவாய், மூச்சுவிடும்துளை நீங்கலாக உடலின் பிற பாகங்களை மூடுகிறது. ஒவ்வொரு தோலுரித்தலின் போதும், பெண்ணின் சில வெளியுறுப்புகள் மறைகின்றன. பிசின் சுரப்பு மிகுகின்றது. இப்பிசின்போன்ற சுரப்பு பின்பு அரக்காக விற்கப்படுகிறது.

[தொடரும்]

www.thamizham.net - Free E book No 7416

தமிழக அரசு செய்யவேண்டுவன!

புலவர். தி. நா. அறிவுஒளி.

தமிழக அரசினர் இன்னே செய்யத்தக்க பணிகள் சிலவற்றை மக்கள் மன்றத்திற்கும் அமைச்சரவையினருக்கும் எடுத்துரைக்க விழைகிறேன்.

1. பெரும்பாவலர். புலவர். குழந்தை யவர்கள் இயற்றிய இந் நூற்றுண்டின் இணையற்ற புரட்சிப் பாவியமான 'இராவண காவியத் திற்கு' முன்னையமைந்த தடையை ஒழித்து. மக்கள் பதிப்பாக வெளி யிடுதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

2. பாவேந்தர் பாரதிதாசன் இயற்றிய ஒப்பற்ற புரட்சி நாடக மான 'இரணியனுக்கு' அமைக்கப்பட்ட தடையை உடைத்து மலிவுப் பதிப்பாக மலரச் செய்தல் வேண்டும்.

3. அறிஞர் அண்ணாவின் ஆரியமாயை கலைஞர். மு. கருணா நிதியின் தடுக்கப்பெற்ற நூல்கள், பகுத்தறிவுப் பேரறிஞர் தந்தை பெரியாரவர்களின் தடுக்கப்பெற்ற நூல்கள். கட்டுரைகள் அனைத்தும் தடைநீக்கம் செய்யப்பெற்றுப், பெருமளவில் மக்களிடை பரவ ஆவன செய்தல் வேண்டும்.

4. பெரியார் ஈ. வே. இராவின் குடியரசு, பகுத்தறிவு, புரட்சி, விடுதலை ஆகிய இதழ்களில் வெளிவந்த அனைத்துக் கட்டுரைகளும் ஆசிரிய எழுச்சியுரைகளும் திருத்தப் பதிப்புகளாக நனிமிகக்குறைந்த விலையில் மாணவர்களுக்கும் இளைஞருக்கும் கிடைக்கச்செய்தல் வேண் டும். படிமங்கள் நாட்டுவதினும், பெரியாரின் கொள்கை வளர்ச்சிக் குழைப்பதே உண்மையில் அவருக்கு நாம் காட்டும் செய்ந்நன்றி யாகும்.

5. இலக்கியக்கழகம் (சாகித்திய அகாடமி), தமிழ் வளர்ச்சிக் கழகங்களில் நற்றமிழறிஞர்களுக்கே இடமளித்து உயர்நிலை யிலக்கி யங்களையும், அறிவியல் நூல்களையும், பகுத்தறிவுசான்ற படைப்பு களையும் ஊக்கி ஆக்கமளித்து தவுதல் வேண்டும்.

6. தந்தை பெரியாருக்கும், மொழிநூற் பேரறிஞர். ஞா. தேவ நேயப் பாவாணருக்கும் 'மதிப்புப் பண்டாரகர்' பட்டமளித்துத் தமி ழகப் பல்கலைக்கழகங்கள் சிறப்புச் செய்தல் வேண்டும்.

7. கழகப் பேரிலக்கியங்கள், பாரதிதாசன், பெரியார் நூல்கள், தற்காலத் தமிழகத்துச் சீரிய பாவலர் தம் பாடற்படைப்புகள் ஆகிய வற்றை உலக மொழிகளிற் பெயர்த்து வெளியிட அறிஞரமைப்புகள் தொடங்கப்பெற்றுப் பணியாற்ற ஆவன செயல்வேண்டும்.

www.thamizham.net - Free E book No 7416

8. கல்லூரியிற் பட்டம்பெறும் மாணுக்கர் ஒவ்வொருவரும் பட்டம் பெறுமுன் முந்நூறு பக்கங்களுக்குள்ளேனும் இதுகாறும் தமிழில் மொழிபெயர்க்கப்படாத புதிய துறைநூல்களை மொழிபெயர்த்தே யாதல் வேண்டும் என்ற முறையை உருவாக்கல் வேண்டும்.

9 சிறந்த பேராசிரியப் பெருமக்களுக்குக் கோடை விடுமுறை, அரையாண்டுக் காலாண்டு விடுமுறைகளில் தேர்வுத்தாள் திருத்தும் பணியை விலக்கிவைத்து அக்காலங்களில் அவர்களுக்குச் 'சிறப்பு ஊதியம் வழங்கி, அமைதியும் நல்வாய்ப்புகளும் உள்ள இடங்களில் உறையச்செய்து மிகச் சிறந்த பிறமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கச் செய்தல் வேண்டும்.

10. தமிழகத்துத் திரைப்படக் கூடங்களும் தனி நிறுவனங்களும் கல்வித்துறை, அறிவியல்துறைத் தொடர்பான இருபடங்களையேனும் உருவாக்கி வெளியிட்டால் மட்டுமே ஒரு கதைப்படம் வெளியிட உரிமையளித்தல் வேண்டும்.

11. தமிழக நாளிதழ்கள், திங்கள், கிழமையிதழ்கள் தூய தமிழ் நடையில் நடத்தப்பெறுதல் வேண்டுமென்று கட்டாயப்படுத்தப் பெறல் வேண்டும். அதற்கிசையாத இதழ்களைத் தமிழினர் வாங்குதல் கூடாது. அவர் இதழ்களை வாங்குவோரை வாங்கவேண்டா' வென மறியல் செய்வதோடு 'செயல்வழி அறிவுரை' வழங்குதல் வேண்டும்.

12. தமிழாசிரியன்மாராக வரும் பலர் தகுதி குன்றியிருப்பது நனி நாணத்தக்க நிலையிலுள்ளமையை மாற்றிடத் தமிழ்க் கல்லூரியிற் பயில்பவரும், தமிழாசிரியப் பயிற்சி பெறுபவரும் தமிழ்த்துறைத் தேர்வெழுதுபவரும் ஏதேனும் ஒருதுறைபற்றி 'ஆய்வுக்கட்டுரை' வழங்கிய பின்னரே தேர்வு பெறத்தக்க நிலையை அமைத்தல் வேண்டும்.

13. எழுத்தாளர் என்ற தகுதிபெற வருபவர் குறித்த காலம் அதற்கென அமையும் பயிற்சி நிலையத்தில் தமிழறிவு, இலக்கண அறிவு, இலக்கிய அறிவு பெற்று வெற்றிபெற வழி வகுத்தல் வேண்டும்.

14. உழவுத் தொழிலை அரசுத்துறை மேற்கொண்டு, மாணுக்கர், பணியற்றோருக்குப் பணிவாய்ப்பளித்து அத்தொழிலை நாட்டுடைமையாக்குதல் வேண்டும். உழவுப்பணி செய்யமறுப்போர் ஒறுப்புறல் வேண்டும்.

15. அறிவியல் துறையில் ஆக்கப்பணிகள் புரிவோருக்கு அனைத்துதவியுமளித்து ஊக்குதல் வேண்டும்.

இனைய செயல்கள் மக்களிடையில் சற்று வெறுப்பை உண்டாக்கினும், தமிழகம்திருந்தி நன்னிலையுற வேண்டுமாயின் செய்தே தீர வேண்டியவை யென்பதை முற்போக்காளர் எவரும் உணர்வர். அறிஞர்கள் ஆழ்ந்தெண்ணிச் செயற்படுவராக.

www.thamizham.net - Free E book No 7416

ஓர் அறிவியல் நாடகம் (முன்னிதழ்த்தொடர்ச்சி)

தொலைபேசி

-செங்குட்டுவன்.

காட்சி-10

இடம்: பில்டெல்பியாக் கண்காட்சி மண்டபம்

உள்ளோர்: பலர்

காலம்: கி. பி. 1907 சுறவ மாதத்தில் ஒரு ஞாயிற்றுக்கிழமை, இரவு 7-மணி.

பெல்: அன்பார்ந்த அப்பர்டுவே! கவனித்தீர்களா? நான் என் கருவியின் இயக்கத்தைப் பற்றியும் புரட்சியைப் பற்றியும் எடுத்துக் கூறியும் நடுவர்களுள் ஒருவர்கூடச் செவிசாய்க்கவில்லை! என் கருவிக்குப் பரிசளிக்காவிட்டாலுங்கூட, என் கண்டுபிடிப்பு என்னவென்றுவது தெரிந்து கொள்ளக் கூடாதா? நடுவர்கள் அனைவரும் அப்புறம் சென்றுவிட்டார்கள் பார்த்தீர்களா! மேலும் இருநாள் இருந்ததன் பலன் துயரப்பெருக்கந்தான்.

அப்பர்டு: வருந்தாதீர்கள். அதுசரி. அஃதென்ன? பிரேசில் பேரரசர் உங்களைக் கண்கொட்டாது பார்த்தபடி வருகிறார். தங்களை அவர் அறிவாரா?

பெல்: தெரியாதே! எந்த அரசருடனும் எனக்குத் தொடர்பு கிடையாதே. அரசினைஞர் எவரையும் அறியேனே!

(பிரேசில் பேரரசர் தாம்பெற்றோ பெல்லின் கைகளைப் பற்றிக் குலுக்கிக்கொண்டே கூறுகிறார்)

பேரரசர்: ஓ! என்னருமைப் பேராசிரியரே! தங்களை மறுபடியும் காணுவதில் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா?

பெல்: (திகைத்து) தாங்கள்... தாங்கள்...

பேரரசர்: பாசுட்டன் பல்கலைக்கழகத்தில் தங்கள் பேச்சொலி வகுப்புகளில் பாடங் கேட்ட...

பெல்: கோண்ட்டி தி அல்கந்தரா தானே!

www.thamizham.net - Free E book No 7416

பேரரசர்: ஆமாம்...ஆமாம்! அஃதென் புனைபெயரே! அதுசரி, தாங்கள் செய்துள்ள கருவியை நான் காண விழைகிறேன் பேராசிரியரே!

பெல் இதோ ...இந்தச் செவிப்பானை உங்கள் காதருகில் வைத்துக் கொள்ளுங்கள். நான் மறுமுனையிலிருந்து பேசுகிறேன். கேளுங்கள்.

(கம்பிகளை மிக விரைந்து நீட்டிவிட்டு பெல் மறுமுனையிலுள்ள கருவியில் பேசுகிருர்)

மேன்மை தங்கிய அரசரே! நான்தான் பேராசிரியர் பெல் பேசுகிறேன். கேட்கிறதா?

பேரரசர்: ஓ, கடவுளே! என்ன மாயம் இது! இந்தக் கருவி பேசுகிறதே! என்ன வியப்பு! பேராசிரியர் என்றியை அழையுங்களேன்! அவர் இதனை ஆயட்டும்.

என்றி: (வந்துகொண்டே) மேன்மை மிக்க அரசர் பெருமானே! அழைத்தீர்களாமே?

பேரரசர்: பேராசிரியர் பெல்லின் தொலைபேசியை ஆராய்ந்து முடிபு கூறுங்களேன்.

என்றி: அவ்வாறே செய்கிறேன் அரசர் பெருமானே!

(கருவியைப் பலவாருக இயக்கி ஆய்ந்தபின்)

கண்காட்சியின் நடுவர்களே! பேராசிரியர் பெல் செய்துள்ள இத் தொலைபேசிக் கருவி தந்தித் தொடர்பாய்வில் பெரும் புரட்சியான திருப்பத்தை உண்டாக்கக் கூடியதாகும். இவருடைய கருவி செப்பம் செய்யவேண்டிய தொடக்க நிலையிலிருந்தாலும் பெரும் புதுமையை விளக்கும் சிறந்த கருவியென நான் கருதுகிறேன். நடுவர்களாகிய நீங்களும் ஆய்ந்து, கண்ட உண்மைகளைத் தெரிவிப்பின் இறுதி அறிக்கையை வெளியிடலாம்.

ஏனைய நடுவர்கள்: தாங்கள் கூறியவாறு இஃதொரு புரட்சியான கருவி யென்பதில் கருத்து வேறுபாடேயில்லை.

வில்லியம் தாம்சன்: (வந்துகொண்டே) அறிஞர் என்றி அவர்களே! ஏதோ புரட்சியான தொலைபேசிக் கருவி யொன்று உள்ளதாமே! எங்கே அது?

www.thamizham.net - Free E book No 7416

என்றி: இதோ இங்கேதான். பெல் என்ற இந்த இளம் பேராசிரியர் செய்த கருவியே!

தாம்சன்: (தம் மனைவியை விளிக்கிறார்) என் அருமை மனைவியே நீ மறுமுனையிலிருந்து பேசு. நான் இம்முனையில் கேட்கிறேன்.

தாம்சனின் மனைவி: அன்பரே! நான் பேசுவது கேட்கிறதா? தங்கள் அறிவியல் ஆய்வுக்காக வயவர் பட்டம் அளிக்கப் போகிறார்களாமே!

தாம்சன்: ஆ! இக்கருவி பேசுகிறதே! சொல்லும் ஒவ்வொரு ஒலியையும் சொல்லையும் தொடரையும் தெளிவாகக் கூறுகிறது. நல்லது, அன்பே! நீ இந்த முனைக்கு வா. நான் அந்த முனையிலிருந்து பேசுகிறேன்.

தா. மனைவி: தாங்கள் பேசுவது தெளிவாகக் கேட்கிறது. அன்பரே! தாங்கள் இந்த முனைக்கு வாருங்கள். நான் பேசுகிறேன்.

தாம்சன்: நீ பேசுவதும் தெளிவாகக் கேட்கிறது. சரி நீ இப்புறம்வா. நான் பேசுகிறேன்.

என்றி: என்ன! தொலைபேசிக் கருவியைக் கண்டவுடன் பேரறிஞர் தாம்சனும் அவர் மனைவியும் வியக்கத்தக்க பொம்மையைக் கண்ட குழந்தைகள்போல் மகிழ்கின்றனரே! (தாம்சனை விளித்து) அறிஞர் தாம்சன் அவர்களே! இக்கருவியைப் பற்றித் தங்கள் கருத்து யாதோ?

தாம்சன்: ஐயுறவுக் கிடமில்லாமல் இஃதொரு சிறந்த கண்டுபிடிப்பே! தேர்ந்த முறைகளாலும் திறன்மிக்க கருவியாலும் பன்னூற்றுக் கணக்கான கற்களைக் கடந்தும் ஒருவர் பேசுவதைப் பிறிதொருவர் கேட்கும் கருவியைப் பேராசிரியர் பெல் இவ்வுலகத்துக்குத் தரக்கூடும். பேராசிரியர் பெல் அவர்களே! தங்களுக்கு எங்கள் வாழ்த்தும் வணக்கமும்.

பெல்: அரசர் பெருமானுக்கு என் வணக்கம் உரித்தாகுக! அறிஞர்களே! தங்கள் யாவருக்கும் நன்றி.

என்றி: நவிலற்க. சீரிய கருவியை உருவாக்கிய பேராசிரியர் அலெக்சாண்டர் கிரகாம் பெல் தம் முயற்சியில் வெற்றிபெறட்டும் என்று வாழ்த்தி விடைபெறுகிறோம். வணக்கம்.

(காட்சி முடிவு)

www.thamizham.net - Free E book No 7416

காட்சி-II

(தொலைபேசி—அறிவியலறிஞர்களிடம் மிகுந்த கிளர்ச்சியை உண்டாக்கிய கருவி. ஆனால் பொதுமக்கள் இம்மாயப் பொறியைப் பற்றிச் சிறிதும் தெரிந்துகொள்ளவில்லை-சிறப்பை உணர்ந்து கொள்ளவில்லை. பொதுமக்கள் இதன் பயனை அறியவேண்டி, பாசுட்டன் நகருடன் சேலம் நகரைக் கம்பித் தொடர்பால் இணைத்தார்கள். பாசுட்டன் நகரில் வாட்சன் இசைக்கருவிகளை இசைப்பார். பெல் சேலம் நகரில் பொதுமக்களுக்குச் செவிப்புலப்படுத்திக் கருவியின் திறனை விளக்கி உரையாற்றுவார். இதன்மூலம் தொலைபேசி மக்களிடையே விளம்பரமாயிற்று. இதற்காகச் சிறிய அழகிய வெள்ளித் தொலைபேசியொன்றை பெல் அமைத்திருந்தார். அதனை மேபெல்லிடம் கொண்டு வருகிறார்.)

பெல்: மேபெல்லே! என் அன்பே! உனக்கு உதவக்கூடிய கருவியை நான் இன்னும் செய்யாவிட்டாலும் உலக முழுமைக்கும் உதவக்கூடிய இக்கருவியைச் செய்துள்ளேன். இவ்வழகிய வெள்ளித் தொலைபேசி மாதிரியை உனக்கு என் அன்பின் நினைவாக அளிக்கிறேன். கொள்மதி அன்பே, குறியெனக்குறித்தே!

கருத்தடங்கண்ணணி! உன் கண்கள் பேசுவதை நான் உணர்கிறேன். பிறர் பேசுவதைக் கேட்க இயலாதவளுக்கு இந்தக் கருவி எதற்கு என்று எண்ணுகிறாயா? அவ்வாறு நினையாதே! உனக்குச் செவியாகவும் வாயாகவும் நான் இருக்கிறேன் அன்பே! அதனாற்றான் அறிவியற்றுறையில் மேலும் உழைத்துப் பல பொறிகளை அமைக்குமாறு கூறியதையும் விட்டுவிட்டேன். உன் குறைபாடுகளை நீக்க முயல்வேன். இத்துடன் உன்னைப்போன்று காது கேட்காதவர்களுக்குப் பயிற்சியளிப்பதே என் பணியாக இருக்கும்.

வாட்சன்: (வந்துகொண்டே) தலைவரே! ஆராய்ச்சியை விட்டுவிட்டு, செவிடர் பள்ளியைத் தொடர்ந்து நடத்தப் போகிறீர்களாமே!

பெல்: ஆமாம் வாட்சன்! எனக்கு மிகுந்த மனநிறைவைத் தரும் பணி அஃதொன்றுதான். மேலும் இதுபோன்ற கருவித்துறையில் ஒருவர் வழியைக் காட்டினாற்போதும். பலர் அதனைப் பின்பற்றி அதனினும் மிக மேலான கருவிகளை அமைத்து விடுவர். தொலைபேசி ஆய்வைத் தொடங்கிவிட்டதுடன்

www.thamizham.net - Free E book No 7416



மாணவரிடையே தென்மொழி பரவட்டும்!

தமிழ்த்தொண்டே எனது தொண்டு எனப் பணிபாடும் தண்டமிழ்த்தலைவ!

ஒப்புயர்வுற்ற திருக்கையால் உலகோரை விழிக்கச்செய்யும் செப்புமொழி நடையில் சீரிய தென்மொழியில் வெளிவரும் 'தென் மொழி' ஏட்டைக்கண்டேன்; காதல் கொண்டேன்; தீந்தமிழின் சுவை அறிந்தேன்; 'தென்மொழி'யின் தொன்மை யுணர்ந்தேன்; வடமொழி வெறியர்களின் வண்டவாளங்களைத் தகர்த்து, வடமொழியினின்றும் தமிழ்மொழியின் நிலையைப் பகுத்து, வடமொழி–ஆரிய- தமிழ்மொழிச் சிக்கல்களை அறிவுக்கண் கொண்டு ஆய்ந்து, தெளிந்து, அறிவித்துத் தொண்டாற்றும் முதுபெருந் தமிழ்ப் பேரறிஞர் மாண்புமிகு

(முன்பக்கத் தொடர்ச்சி)

அமைந்து என் மனத்துக்கினிய பணியையே பார்க்க விரும்புகிறேன்.

வாட்சன்: உங்களைத் தேடிவந்த தொலைபேசி நிறுவனப்பங்கு ஆவணங்கள் பலவற்றையும் வேண்டாவென்று கூறிவிட்டீர்கள்! பல கோடிக்கணக்கில் பணம் பெருகுவதையும் விரும்பவில்லை. பணப்பற்றுதான் தங்களுக்கில்லையென்றாலும், பெல் தொலைபேசி நிறுவனத்தின் தலைமையாளராக இருக்கவேனும் ஒப்புக்கொண்டிருக்கலாமே! எவ்வளவு மதிப்புள்ள பதவி! எத்தகைய ஏந்தான வாழ்க்கையை நடத்தலாம்!

பெல்: சரி சரி; அவற்றை யெல்லாம் விடு. மிகவும் இன்றியமையாத செய்தியொன்றை அப்பர்டு கூறினாரா?

வாட்சன்: இல்லையே! ஏதோ தாங்கள் இன்றியமையாத செய்தியைக் கூறப்போவதாகத் தங்களிடம் அனுப்பினார்.

பெல்: அடுத்த மாதம் எனக்கும் மேபெல்லுக்கும் திருமணம் நடைபெறப் போகிறது.

வாட்சன்: மிக்க மகிழ்ச்சி தலைவரே! வேண்டிய ஏற்பாடுகளை நானும் செய்யத் தொடங்குகிறேன். (காட்சி முடிவு)

[தொடரும்]

www.thamizham.net - Free E book No 7416

ஞா. தேவநேயப் பாவாணர் வழியிலே தொண்டாற்றி வரும் தங்கள் ஒப்பில்லா முயற்சிக்கு எனது உள்ளங்கனிந்த வணக்கங்கள்!

நாட்டு மக்களின் மனப்போக்கை செம்மறியாட்டுத்தனமாக மாற்றி—தமிழ் உலகிலே இல்லாத-காணக்கூடாத அருவருப்புப் படங்களை அச்சிட்டு—செந்தமிழ் எனக் கொச்சைத்தமிழை மொழிந்து—தமிழ் நடைக்கு ஒவ்வாத செயல்புரிந்து, வரும் ஏடுகள் பல! 'தமிழரின் புகழ் பாடும் தண்டமிழ்ஏடு' எனப்பாராட்டிக்கொள்ளும் தரங்கெட்ட ஏடுகள் பல! அத்தகைய ஏடுகளே மக்கள் மனத்தில் நிற்பன! நிற்கின்றன! இவ்விழிநிலைமாறி—அறிவுநிலை ஏற்பட நாட்டுத் தலைவர்கள் முயலல் வேண்டும்! ஆனால் நாட்டை ஆளும் கோட்டைக் கோமான்கள்—பாச வலை விரித்து மக்கள் ஒப்போலைகளைவாங்கி உலாவரும் திருவாளர்கள் தமது பெயரையே நாட்டுமக்களிடை பரப்ப அவ்வேடுகளைப் பயன் படுத்திக்கொள்கிறார்கள்.

இத்தகைய இக்கட்டான நிலையில் தமிழ்-தமிழர்—தமிழ்நாடு எனத் தொண்டாற்றி அதற்காகவே உயிர் – பொருள் – ஆவி ஆகியவற்றை இழந்துவரும் தங்கள் தொண்டுள்ளம் கண்டு வியக்கின்றேம். 'தமிழக விடுதலை'யின் கீழ் தாங்கள் தீட்டிய எழுத்தோவியத்தைப் படித்துணர்ந்தேன். அறவழியில் நின்று, மறவழிகொண்டு திறமாகச் செயல்புரிய அழைக்கும் தங்கள் 'அன்புவழி' தான் என்னே! இத்தகைய உயரிய நிலையில் தொண்டாற்றும் 'தென்மொழி' மாணவர் உள்ளங்களில், குறிப்பாகக் கல்லூரி மாணவர்கள் உள்ளங்களில் ஆழ்ந்து படியாமல் இருப்பது வருந்தற்குரியது.

இரா. மா. சிவசுப்பிரமணியன்,
இராசபுரம் அஞ்சல், அரயக்குறிச்சி

சமற்கிருதம் வேண்டுமா?

பெருமதிப்பிற்குரிய பெருந்தகையே!

6–4–69 ஆனந்தவிகடன் இதழைக் கண்டேன்! அதில் 16–ஆம் பக்கத்தில் 'சமற்கிருதம் வேண்டும்' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையைக்கண்டு துயர் அடைந்தேன். இறந்த சமற்கிருதத்திற்கு உயிர் கொடுக்கும் படலம் அண்மையில் மயிலாப்பூர் சீனுவாச சாத்திரி மண்டபத்தில் நடைபெற்றதாம். அதில் கலந்துகொண்ட பல அறிஞர்கள் (எவ்வகையில் அறிஞர்களோ) தமிழகத்து உயர்நிலைப் பள்ளிகளில் சமற்கிருதத்தைக் கற்றுக் கொடுக்கப் போகின்றார்களாம். அதற்கான

www.thamizham.net - Free E book No 7416

முயற்சியையும் எடுக்கப்போகின்றார்களாம். வரவேற்றுப் பேசிய திரு கே. பாலசுப்பிரமணிய அய்யர் 10. 11-ஆம் வகுப்புகளில் சமற்கிருதம் சொல்லித் தரப்படுகிறது இது விரும்பத்தகாதது. எனவே 6-ஆம் வகுப்பிலிருந்தே சொல்லித்தரல் வேண்டும் என்றும், பள்ளிகளிலிருந்து விலக்கப்பட்ட சமற்கிருத ஆசிரியர்களுக்காகப் புலம்பியும் பேசி இருக்கின்றார். திரு. ம. பொ. சிவஞானம் இந்தியப் பண்பாட்டிற்குச் சமற்கிருதம் ஓர் இணைப்பு மொழி என்று ஓலமிட்டு இருக்கின்றார். சமற்கிருதம் மக்களின் சொந்தமொழி; உலகில் தலை சிறந்த மொழி; இந்தியாவின் உயிர்; அதற்குப் புத்துயிர் அளிக்காவிட்டால் இந்தியா அழியும் என்று கூட்டத்தில் கலந்துகொண்ட என். இரகுநாதய்யர், எம். பி. தாமோதரன், கோமதி சங்கர தீட்சிதர் கே, சகுந்தலா ஆகியோர் அனைவரும் கூக்குரலிட்டு இருக்கின்றார்கள்.

ஐயா, இவ்வளவு தலைசிறந்த மொழியா உலக வழக்கற்றுவிட்டது? வெட்கம்! வெட்கம்!! இவர்களின் அறிவு வெற்றிடமாக இருப்பதைக்கண்டு வருத்தப்படுகின்றேன். சுருங்கிய குடலுடன் திரியும் வதங்கிய தமிழனுக்கு ஒரு சிறு உதவியும் செய்ய மனமில்லாத இந் நெஞ்சழுத்தக்காரர்கள் தமிழ் மாணவச் செல்வங்களுக்காக சமற்கிருதம் பயிற்றுவிக்கப் போகின்றார்களாம். மக்களின் நலனுக்காகவோ, நாட்டிற்காகவோ நல்லதைச் செய்யாத இவர்கள் மாணவர்களின் நலனுக்காகச் சமற்கிருதம் கற்பிக்கப்போகின்றார்களாம். அழிந்த மொழிக்காக, வழக்கற்று மாண்டுவிட்ட மொழிக்காக, தம்மை அறிஞர்கள் என்று சொல்லிக்கொள்ளும் இவர்கள் எதற்காக இவ்வளவு துன்பப்பட்டுத் தமிழ் மாணவர்களை வதைக்க நினைக்கின்றார்களோ? ஏ, தமிழனே! இன்னுமா உனக்குப் புரியவில்லை? உன் எதிரி அண்மையில் தான் இருக்கின்றான். இந்த இழிந்த புற்களைக் களைந்தெடுத்து உன் மொழியையும், நாட்டையும் வளப்படுத்து. பட்டது போதாதா? இன்னுமா வேண்டும்?

—வீ. துரையரசன், வான்படை, இண்டன். (13-5-69)

வடமொழிக்கு இடம்வேண்டுமாம்!

அன்புசால் ஐயா, வணக்கம். யான் மீனம் கக-ஆம் நாள் (24—3—69) ஆங்கிலச் செய்தித்தாள் ஒன்றைக் கண்ணுற்றேன். அதன் வாயிலாக ஆரியர்கள் வடமொழி வளர்ச்சியில் கொண்டுள்ள அக்கறையும் அவர்கள் கூறும் பொய்யும் புரட்டும் கீழ்க்கண்ட செய்திகளிலிருந்து நன்கு தெளிவாயின.

www.thamizham.net - Free E book No 7416

ஆரியர்கள் ஒரு குழு அமைத்து வடமொழி (சமற்கிருதம்) யின் வளர்ச்சிக்கு உதவிசெய்யுமாறு தமிழக அரசிடம் கேட்டுள்ளார்கள். சமற்கிருதம் உயர்நிலைப் பள்ளிகளில் பாடமாக்கப்பட வேண்டுமாம். வடமொழி கல்வி நிலையங்களில் பாடமாக்கப்படுவதற்கு அவர்கள் கூறும் போலிக் காரணியங்கள் ஒத்துக்கொள்ளக் கூடாதவை என்க

1. இந்தியாவின் கலைவளர்ச்சியும், பண்பாடும் வடமொழி நூல்களில்தான் மிகுதியாகப் பொதிந்து கிடக்கின்றனவாம்.

2 உலகின் முதன்மொழியாகவும், செல்வாக்கான மொழியாகவும் கருதப்படுவது வடமொழியாம்.

3. சமற்கிருதம் ஒவ்வொரு மாந்தனுக்கும் மிகவும் இன்றியமையாததாம்.

4 ஒவ்வொரு மாந்தனின் உள்ளத்தையும் கவரும் தன்மையுடையதாம்.

இவற்றையெல்லாம் நாம் ஏற்றுக்கொண்டு கல்வி நிலையங்களில் (வழக்கொழிந்த) ஆரிய மொழிக்கு இடம் தரவேண்டுமாம். அதற்காகச் சிலர் தூதுசெல்ல இருக்கிறார்கள். சமற்கிருத ஆசிரியர்களுக்கு உடனே பணிகொடுப்பதற்கு அரசு ஆணையிடவேண்டுமாம். இவற்றையெல்லாம் நிறைவேற்றத் தவறினால் இன்றைய மக்களின் பண்பாடும், பழக்கவழக்கங்களும் அழிந்து விடுமாம்.

இப் பித்துக்கொளிச் செயலை நோக்கினால் நகைப்புத்தான் மிஞ்சுகிறது, "ஆரியம் போல் உலக வழக்கழிந்து..." என்று பேராசிரியர். சுந்தரம்பிள்ளையவர்கள் கூறியது மறைந்துவிடுமா? அல்லது ஆரியத்தைக் கசடறக்கற்ற மறைமலையடிகள் "தமிழ்த்தாய்" கட்டுரையில் கூறியது மறைந்துவிடுமா?

தமிழிற்குத் தன்னுலியன்றதைச்செய்து 'தகவாம்' என்று போற்றப்பட்ட, போற்றப்படுகின்ற தமிழக அரசு ஆரியர்களின் போலிப் பேச்சுகளுக்கும். புகழுரைகளுக்கும் பணிந்துவிடாமல் இருக்குமாறு வேண்டிக்கொள்வதுடன் இம்மடலை முடிக்கின்றேன்.

—அ. மாயிறைவன், பூண்டி. (மீனம்–௩௨)

'தீவம்' ஆசிரியருக்குத் துணிவு உண்டா?

அன்பார்ந்த பாவலர் அவர்களுக்கு,

'தீவ' வெளியீட்டாளருக்கு விடுத்த அஞ்சலின் படியைக் கீழே கொடுத்துள்ளோம். இவர்தம் கரவுரையை வெருட்ட 'மாணிக்கவாசக

வரலாறும் காலமும்' எனும் நூலின் ௧௬-ஆம் இயலைத்தென்மொழியில் வெளியிடவேண்டுகிறோம்.

தமிழரை அழிக்குழியிற்றள்ளக் 'கல்கி'யில் இராமாயணம் மறுமுறை வெளியிடப்படுகிறது. பிறைமுடிப் பாவலர் (சந்திரசேகரப் பாவலர்) எழுதிக் குடியரசுப் பதிப்பகத்தார் வெளியிட்ட இராமாயண ஆராய்ச்சியை ஒப்புதல் பெற்றுத் தனித்தமிழில் தென்மொழியில் தொடர்ந்து வெளியிட்டால் நலம் பயக்கும்.

—சு. திருஞானம், மு. அறி., இல. க, இரத்தினவேல், இ. அறி.
திருச்சிராப்பள்ளி.

'தீவ' ஆசிரியருக்கு விடுத்த மடலின் படி.

நும் தீவத்தின் ஐந்தாம் ஆண்டு மலரில் "ஐயா வள்ளுவரே" என்னும் உரைப் பாவைக் கண்டனம். நுமக்கு நேர்மை, மானம், துணிவு என்பவை எள்மூக்கத்துணையாவது இருப்பின், பெரும் பேராசிரியர் மறைமலையடிகள் எழுதிய "மாணிக்க வாசகர் வரலாறுங் காலமும்" என்னும் பொன்னூலின் "சுட்குடிப்பாட்டும் சூதாட்டப் பாட்டும் இருக்குவேதத்தில் காணப்படல்" (பக்கம் ௩௬௩—௩௭௨) என்னும் ௧௩-ஆம் இயலை நும் இதழில் முற்றும் வெளியிட்டு மறுப்புரை எழுதுக. அதற்கியலாது நும் கரவாட்டங்களை இன்னும் முத்தமிழ் நிலத்தில் காட்டுவது நும் வழிமுறைக் கீழ்மையையே சுட்டும்.

பி. கு: நுமக்குத்துணிவிருப்பின் இம்மடலை நும்மிதழில் வெளியிடுக

சு. திருஞானம்
இல. க. இரத்தினவேல்

தனித்தமிழ் தெளிக்கும் தென்மொழிக்கு,

பொன்னேர் கருத்துகள் பொதிந்த தென்மதுரைத் தமிழ் பெற்றெடுத்த இந்நிலத்தின் முத்தகுடியாம் தமிழினம் இன்று தலையிழந்து—தன் நிலைமறந்து, மறம் விளைக்கும் வலிமறந்து மண்டியிட்டுக்கிடக்கும் நிலையெண்ணி என்னே கூறுவது! மொழியடிமைப்பட்டு, குழுகாயக் குமுறல்களில் சிக்குண்டு சிதறி, காணக்கிடைக்காத தமிழினத்தை ஒன்றுசேர்த்து உரம்ஊட்டி, மறம்ஏற்றி, மாண்புதனை அறியச் செய்து, அவனியில் அவனுக்குள்ள அளவில்லாப் பெருமையை உணரச்செய்து உவகையூட்டி, எதிர்வரும் பகைக்குன்றைத் தனி ஒருவனே உருட்டுகின்ற மனஉறுதி கிடைக்கக்கூடிய செயல்கள் தமிழர்

www.thamizham.net - Free E book No 7416

தலைவராலும், தென்மொழியாலும் அதன் சீரிய இலக்கிய நடையாலும் நடைபெற்றுவரும் வேளையிலுங்கூட தமிழன் இன்னும் மீளாத்துயில் கொண்டுள்ளான்.

நிறவேறுபாட்டையும், மொழியடிமையையும் அறவே நீக்கிப் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று பண்பாடியதென்னாடு இன்று எல்லாவகையிலும் அடிமைத்தளையுண்டு கிடக்கின்றது. தீண்டாமையை ஒழிக்க என் உயிர் போனாலும் ஒப்பேன் என்ற அப்பண்டாரத்தை இன்னும் உயிரோடு வைத்துள்ள அளவுக்கு நமக்குப் பொறுமையும் துயில்மயக்கமும் இருக்கின்றது என்பது எள்ளத்தக்கதே. அண்மையில் 'ஆனந்தவிகடன்' என்ற வார இதழில் ஒரு 'தங்கப்புத்தகத்திற்கு' மெருகேற்றப்பட்டது. காஞ்சிக்கிழவனின் மனம் பூரிக்கும்படி அமைக்கப்பட்டதாம் அந்த ஆங்கிலப் பாடநூல். அந்தத் 'திரு' உள்ளத்தின் மனம் பூரிக்கும் என்றாலே தமிழனின் நலத்திற்கு வைக்கப்பட்ட வெடி என்றே கொள்க. அந்த நூலில் "மரத்தடியில் மறைந்திருந்து வாலியினைக் கொன்ற மட்டமுறு கருத்துகள்" நிறைந்த இராமாயணத்தின் தலைவன் இராமன் பெயர் வருகின்றதாம். 'E'என்ற எழுத்துக்கு, ஏகலைவன்; A என்ற எழுத்துக்கு அருச்சுனன், R என்பதற்கு இராமன், இப்படி நாட்டுக்கும் நாட்டின் பண்புக்கும் இழிவு தருகின்றபடி இளம் உள்ளங்களில் அந்தப் புத்தகத்தின்மூலம் ஆரியத்தையும் அறியாமையையும் வளர்க்க முற்பட்டுள்ளனர். இப்படித் தமிழனை இழிவுபடுத்தித் தன் இனப் பெருமையை உயர்த்தது போல் காட்டக் "காஞ்சிகளும்" "பூரிகளும்" எழுதுகோல் எடுத்துவிட்டமை கண்டும் தமிழன் தனது எழுதுகோலை வைத்த இடம் தெரியாமல் தவிப்பது ஏதனால்...?

—ஒப்பிலாமணி, கீரமங்கலம், (4—6—69)

தென்மொழிபால் ஐயமா?

தண்டமிழ் வளர்க்கும் தகைசால் தலைவ! ஆசிரியப் பெரும!

வணக்கம்! நலம்பொழிய விழைகின்றேன். யான் தென்மொழி தொடங்கப்பெற்ற இரண்டாம் யாண்டினின்று, இன்றுவரை தென்மொழியைச் சுவைக்கும் அன்பரில் ஒருவன்—அன்றன்று; தென்மொழிபால் பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டவன்.

இக்கால் எழுந்துள்ள சில அரசியற் சூழலால் தென்மொழியாசிரியரின்பால் கரவும் ஐயமும் அடைந்துள்ள சில அரசியல் அடி

www.thamizham.net - Free E book No 7416

வருடிகள், பிறரிடத்தும் தீதாய்க்கூறி வருகின்ற நிலைமையினை உண்டாக்கி வருகின்றனர். அத்தகையாரை இனங்கண்டு விலக்குதல் மட்டும் கடனெனக் கொள்ளாது, அவர்களின் உண்மைத் திறனை நம்மவர் எல்லாரும் தெள்ளிதின் உணர்ந்திடச் செய்தலே இதுபோழ்து நம்முடைய முன்மைப் பணியெனவும் கொள்ளல்வேண்டும்.

தென்மொழிபால் ஐயுறுவாருக்கும், அவ்வாறு ஐயுற்றவர்களின் பேச்சினில் தம்மை மயக்குறுத்திக் கொண்டாருக்கும் தென்மொழியின் தொடக்கக் காலம் முதல் அதன் ஆசிரியரின் திட்டவட்டமான எண்ணத்தை எடுத்துக்கூறி, அவரின் வினைமாண்மைக் காட்ட விழைகின்றேன்.

"கொண்ட கொள்கையும் வலிது; கொள்கை நடக்கின்ற வழியும் புதிது; துணையும் சிறிது; இருப்பினும் இறக்கத் துணிந்தார்க்குக் கடல்நீர் இடுப்பளவு எனும்படி உயிரைப் பணயம் வைத்தாகிலும் எடுத்த வினையை முடிப்பதே நம் வாழ்க்கையென எண்ணிக் கொஞ்சமும் அஞ்சாது நடையிடத் தொடங்கியுள்ளோம்"

(சுவடி-2. ஓலை-1)

"தென்மொழியின் முழு மூச்சே நம் பண்டைத் திருமொழியாம் செந்தமிழை அதற்குத்தக்க ஓர் உயர்நிலையில் நிலைநிறுத்துவதும், நமக்கென்று பண்பட்ட செப்பமான ஓர் அரசை அமைத்துக் கொள்வதுமாகும். எத்தனை ஆயிரம் அரசியல் சூழ் நிலைகள் வரினும் நாம் இந்த அடிப்படையான கொள்கையினின்று விடுபடப் போவதில்லை"

(சுவடி-4. ஓலை-12)

"என் மனைவி மக்களே எனக்கு மாறாக நடப்பினும் நான் கவலைப்படேன். அந்நிலைக்கு என்மேல் உள்ள எல்லாக் கட்டுகளையும், தளைகளையும் வெட்டித் தகர்த்து விட்டேன். அன்போ, நட்போ, உறவோ, நொதுமலோ, பகையோ எதுவும் என்னைக் கட்டுப்படுத்தாது. நான் பொதுவன்; என் உடலிலுள்ள ஒவ்வோர் அணுவும் பொது; என் எண்ணம், எழுத்து, வினை, விளைவு அனைத்தும் பொது"

(சுவடி-5. ஓலை-1.)

இவ்வாறெல்லாம் கூறித் தன்னைப் பொதுவனாக்கி. தன்னையே தமிழன்னைக்கு ஒப்படைத்துவிட்ட ஈகச் செம்மலைப்பற்றி மீண்டும் ஐயப்பாடு கொள்வோரின் ஐயந்தீரும் வகையில் ஆறும்சுவடியில் அவரின் தொடர் கட்டுரை "என் இயக்கம் பற்றிய சில விளக்கங்கள்" எனுந் தலைப்பின்கீழ் ஒளிவு மறைவின்றி, உள்ளதை உள்ளபடியே எழுதி வருகின்றனர். இதைப் படித்துத் தன் ஐயம் போக்கிக் கொள்

www.thamizham.net - Free E book No 7416

ளாதவன் எத்துணை அறிவு நலம் கொழுவிய மாந்தனுயிருந்தாலும், அவனின் பரிவு தென்மொழிக்குத் தேவையே இல்லை என எத்தனை முறை வேண்டுமானாலும் எழுதிக் காட்டிட அணியமாயுள்ளேன். அரசியலிற் செல்வாக்கு உள்ளவன் எதைச் சொன்னாலும் ஏற்றுக் கொள்வது என்ற இழிதகைநிலை விரைவில் ஒழிந்திடத்தான் வேண்டும்!

தாம் பார்த்துவந்த அலுவலினின்று அரசினரால் விலக்கப் பட்டு, இந்தியெதிர்ப்புப் போராட்டத்தில் வெஞ்சிறை பெற்றார்; இந்தியை எதிர்த்து உரிமைக் குரல் எழுப்பினர், தமிழனுக்கு இனவுணர்வும், மொழியுணர்வும் ஊட்டினார். தம் பெண்டு, தம்பிள்ளை என்றிருந்த கடுகு உள்ளத்தினர்களை, நாடு, உலகு என்ற பரந்துபட்ட பொதுமைப் பண்புடைய பண்பாளர்களாக ஆக்குவித்தார். தவறு செய்வோர் எவராயினும், எந்நிலையினராயிருந்தாலும் அஞ்சாது நேர்மை ஒன்றையே நிலைக்களனாகக் கொண்டு இடித்துரைத்தார். தமிழின் பெயரைக்கூறித் தமிழுக்கு இரண்டகம் செய்யும் தெ. பொ. மீ., முத்தையன், செயகாந்தன் போன்ற கும்பல்களின் போலிப் பெருமையினைக் கிழித்தெறிந்தார். உலகத் தமிழ்க் கழகம் கண்ட இவர், தமிழக விடுதலைப்படையும் அமைத்திடச் சிறிதும் தயங்கினாரில்லைகாண்! என்னே இவரின் வினைமாண்பு!

நல்லுள்ள நாயகராம் தென்மொழி ஆசிரிய நண்பர் பெருஞ்சித்திரனார் அவர்கள் நமக்கு ஆற்றிய தொண்டினைவிட, இனி ஆற்றவிருக்கும் தொண்டால்தான் நம்முடைய வாழ்வே மலர்ந்து மணம் வீசப்போகின்றது. எனவே அவரின் வழிநின்று, அவரின் செயலுக்குத் துணைநிற்றல் ஒன்றே நாம் அவருக்குச் செய்யும் பெருந்தொண்டு-கடமை என்று கொள்ளல் வேண்டும்.

இதிலெல்லாம் தெளிவு அடையாத் தெருண்ட நெஞ்சினர்க்குத் தென்மொழியாசிரியரின் பாடல்வரி ஒன்றினைக் கூறி, இம்மடலை முடிக்கின்றேன்.

"உடல் நரம்பில் தமிழ்க்குருதி ஓடாதார்
ஒதுங்கிடுக;
......தமிழ் மானங்காக்கும்
அடல்மறவர் வெங்களிற்றுக் கூட்டமெனை
அலைந்தெழுந்தார்; அவர்நடைக்குத் தடைசெய்யாமே"

–பி வெற்றியழகன, விடை எ. தி. பி. 2000 (20—5—1969)
வாண்டையார் இருப்பு.

www.thamizham.net - Free E book No 7416

(சுவடி-7. ஓலை-2 இன் தொடர்ச்சி)

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்
ஆய்வுக்கட்டுரை,

தமிழின் பழைய வரிவடிவும் அதன் புதிய ஒலிவடிவும்

"THE OLD TAMIL SCRIPTS AND ITS REFORMED NEW SOUNDS"

பேராசிரியர். மு. உலகநாதன்.

பீடுநடையும் ஏறுநிலையும்: மேலும் இவர்கள் கண்டுபிடித்துள்ள உயிர் எழுத்துகள் உயிர்மெய் யெழுத்துகளாக மாற்றம் பெறுகிற போது, இன்றைய உயிர்க்குறியீடுகளான (ெ, ே, ை, ா) இவை உயிர் மெய் யெழுத்துகளின் முன்னும் பின்னும் நிற்பதுபோல்-உயிர் எழுத் துகளே உயிர் மெய்யின் பின் நிற்கும் ஓர் இரக்க நிலையையும் எய்து கின்றன. அதனால் உயிரின் நிலைத்த தன்மையான பீடுதன்மை (Majesty) பறிபோய்விடுகிறது.

உயிர் முதல்மொழி: அதுதான் அப்படியென்றால் உயிர் எழுத் துகளை முதல் எழுத்துகளாகக் கொண்ட சொற்கள் எல்லாம் பார்க் கவே நோய்வாய்ப்பட்ட குழந்தையைப்போல் இரக்கத்திற்குரியன வாகக் காணப்படுகின்றன.

லெய்-இலை	ெட்டகம்-ஒட்டகம்
eக்கள்-ஈக்கள்	ஔணான்-ஓணான்
6டவ-ஏடு	
ரே்-ஏர்	

இவ்வெடுத்துக் காட்டுகள் புலவர் குழந்தைக்குரியன

¶க்கள்-ஈக்கள்
Pர்-ஊர்
ṉன்ரு-ஒன்று

இவைபோல் இன்னும் பல திருஞானசம்பந்தன் அவர்களுக்குரியன.

"தமிழுக்கும் அமுதென்றுபேர்-அந்தத்
தமிழின்பத்தமிழெங்கள் உயிருக்கு நேர்"

என்று பாடினார் புரட்சிப் பாவலர் பாரதிதாசன்

உயிரின் தன்மை எப்படி இருக்கிறது பார்த்தீர்களா?

ஆங்கில எழுத்துகளையும் குறியீடுகள் போன்ற வரிவடிவங்களை யும் உயிரெழுத்துகளாகக் காட்டித்தான் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டுமா?

www.thamizham.net - Free E book No 7416

இப்படிப்பட்ட கலப்புச் சீர்திருத்தம் செய்வாரை என்சொல்வது?

தமிழின் தொன்மை: இப்போதே தமிழ் நேற்றுத் தோன்றிய மொழி என்று ஒருகூட்டம் அடித்துப் பேசிவருகிறது.

தெரிந்தோ, தெரியாமலோ இத்தகைய சீர்திருத்தங்கள் தமிழ் உலகில் புகுமானால் தமிழ் சமற்கிருதத்திலிருந்து தோன்றிய மொழி என்று கூறப்படுகின்ற பொய்க்கருத்தைப் போல் ஆங்கிலத்திலிருந்து தோன்றியதே என்ற கருத்தும் வலியுறுத்தப்படும் என்ற கருத்தை இச்சீர்திருத்தக்காரர்கள் ஏன் உணரவில்லை.

பிறமொழி எழுத்துகளில் சில எழுத்துகளின் ஓசை தமிழ் மொழியில் இல்லைதான். ஒத்துக்கொள்வோம்.

அதற்காக அவ்வெழுத்துக்களை அப்படியே வடவெழுத்தாயினும், ஆங்கில எழுத்தாயினும் கொள்ளவேண்டும் என்ற தேவை இல்லை. அவ்வோசையுடைய புதிய தமிழ் எழுத்துகளை நல்ல முறையிலேயே உருவாக்கம் செய்தல்வேண்டும்.

தமிழுணர்ச்சி: தமிழின் சிறப்பெழுத்துகளை வடமொழியோ, ஆங்கிலமோ தன்னிடத்தில் இல்லையென்பதற்காக அப்படியே எடுத்துக் கொள்ளவில்லையே! மாறாக அவர்களுக்குள்ள எழுத்துகளில் ஒன்றை வைத்துத்தானே அவர்கள் தங்கள் ஓசைகளை நிறைவுசெய்து கொள்கிறார்கள்.

அந்த உணர்ச்சி தமிழனுக்கும் வேண்டாவோ?

சீர்திருத்தம் என்பது நன்கு கருதிச் செய்யவேண்டிய ஒன்று.

அக்கருத்து நாளானாலும் திருத்தம் சொல்லமுடியாத வலுவுடையதாக இருக்க வேண்டும். அதை விடுத்துவிட்டு ஏதோ சொன்னோம், ஏதோ செய்தோம் என்றிருத்தல் கூடாது.

காலம் கடந்த மொழி: காலம் கடந்த ஒரு மொழியில் சீர்திருத்தம் என்ற பெயரால் கைவைக்கின்றபோது சிறுபிள்ளைத்தனமாகவோ விளையாட்டுத் தனமாகவோ ஒரு கருத்தைக் கூறிவிடுவோமானால் அஃது ஓர் இனத்துக்கே கேடு பயப்பதில் கொண்டுபோய் முடித்து விடும்.

புகழும் பொருளும்: புதுமையின் மூலம் புகழ் வரலாம். பொருள் வரலாம். அவற்றிற்காக இனப்பகைவன் என்னும் இழிபெயரைச் சீர்

www.thamizham.net - Free E book No 7416

வரக் கருதிப் பார்க்காமல் தமிழ்ச் சான்றோர்கள் ஏற்றல் வேண்டா என்பதே என் கருத்து.

குழப்ப எழுத்துகள்: "தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தில்" இன்றியமையாத உகர ஓசையுடைய எழுத்துகளைப் பல்வேறு வரிவடிவ வேறுபாடின்றி இருக்கின்ற பதினெட்டு மெய் வடிவிற்குள்ளேயே காட்டி விடுவோமானால் தமிழ் எழுத்துச் சீர்திருத்தமே முற்றுப் பெற்றுவிடும் என்பது என் கருத்து.

இக்கருத்து தமிழ் எழுத்துகளின் மரபை ஒட்டியது. மேலே பார்த்தவைகளைப் போல் மரபு பிறழ்ந்தது அல்ல என்று கூறுவேன் அதனால் பல ஆராய்ச்சியாளர்களின் கருத்துகளை ஏற்றும், மறுத்தும் பல புதியகோணங்களைத் தமிழ் மக்களின் ஆய்வுக்கு வைத்துள்ளேன்.

யாரும் சுருக்க முடியாது: இதனில் தமிழ்மொழியின் பண்டைய வரிவடிவங்களைப் பெரும்பாலும் புதுக்காமல் ஒரு சில மாற்றத்தை மட்டும் அளவை முறையில் கூறி எழுத்துச் சீர்திருத்தத்தை எல்லா நிலையிலும் பொருந்தி வரக்கூடிய முறையில் குறைத்துக் காட்டியிருக்கின்றேன். வார்ப்பு அச்சாயினும், அச்சுப்பொறியாயினும், தட்டெழுத்துப் பொறியாயினும் எதுவாயினும் இம்முறையினால் ஆங்கில எழுத்துகளின் முறைகளைக் காட்டிலும் சிறப்புடையதாக ஆக்கியிருப்பதோடு இதைக் காட்டிலும் யாரும் சுருக்க முடியாது என்பதையும் கூறிக்கொள்ளும் வகையில் இதனைச் செய்திருக்கின்றேன்.

ஏன்?

எவ்விதமான ஒரு முடிவுமின்றிப் பல்வேறு அறிஞர்களால் பல் வேறு நிலைகளிலிருந்து தத்தம் கருத்துகளையும் புலமையினையும் காட்டும் போக்கிலேயே மேலேகண்ட எழுத்துச் சீர்திருத்தம் அமைந்துள்ளது.

தமிழ்மணம்: அதனைத் தமிழ் மக்களின் மனப்போக்கோடு ஒட்டிச்செய்ததாகக் கூறமுடியாது. எனவேதான் அதற்கோர் முற்றுப் புள்ளி வைக்க இக்கட்டுரை உருவாயிற்று.

எழுத்துகள்: தமிழ் மொழியில் உயிரெழுத்துகள் 12. மெய்யெழுத்துகள் 18. சார்பெழுத்துகள் மூன்று (3) ஆக மொத்தம் 33 எழுத்துகள். இவற்றின் அடிப்படையில் பிறக்கும் உயிர்மெய்யெழுத்துகள் 216. இவற்றை எப்படிக் குறைப்பது?

www.thamizham.net - Free E book No 7416

விலங்கு பெறுதல்: உயிர் எழுத்துகளிலும், உயிர்மெய் எழுத்துகளிலும் விலங்குபெறுதல் என்னும் முறைமை உண்டு. அவை கீழ் விலங்கு, மேல்விலங்கு, உயிர்க்குறி (ை) கால் (ா) கொம்பு (ெ) (ே) என்பன.

இந்த விலங்கு பெறுகின்ற தன்மையிலேயே தமிழ் எழுத்துகள் மிகப்பல வரிவடிவ வேறுபாடுகளைப் பெறுகின்றன.

எனவே இந்த விலங்கு பெறுகின்ற தன்மையைச் சற்றுக் கட்டுப்படுத்தினால் தமிழ் எழுத்துகளை ஒரு கட்டுக்கோப்பிற்குள் கொண்டு வந்து விடமுடியும் என்பதை முதலில் அறிந்து கொள்ளல் வேண்டும்.

யாவும் தேவையா? 'க' என்ற எழுத்தைக் கி, கீ, என்னும் போது மேல் விலங்கும், கு, கூ, என்னும் போது கீழ்விலங்கும், கா என்னும் போது காலும் கெ, கே, என்னும் போது உயிர்க்குறியும் கொ, கோ என்னும் போது உயிர்க்குறியும் காலும் பெற்று நிற்பதைக் காணலாம். இவ்வாறு வரும் எல்லா விலங்குகளும் தேவை தானா? ஒரு சில தேவையான விலங்குகளை வைத்துக்கொண்டு தமிழ் எழுத்துகளைச் சீர்திருத்தம் செய்ய முடியாதா எனில், முடியும்.

முடியும்:

தமிழ் மொழியில் உயிர் பன்னிரண்டு என்று பார்த்தோம்.
அவற்றில் நெடில் ஏழு, குறில் ஐந்து.

குற்றெழுத்துகளிலிருந்தே நெடில் தோன்றுகிறது. அவ்வாறு தோன்றும் நெட்டெழுத்துகள் ஏழும் ஏழுவிதமான வரிவடிவைப் பெறுகின்றன.

அ, இ, உ, எ, ஒ,—குறில்
ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, ஐ, ஔ—நெடில்

நீக்கம்: இந்த ஏழு நெடிலையும் நீக்கிவிடலாம். எப்படி? க, ச, த, ப என்னும் எழுத்துகள் நெடுமையை உணர்த்துகின்ற போது கா, சா, தா, பா, என்பன போன்று காலின் (ா) துணையை நாடுகின்றன. இவ்வாறு காலின் துணையை நாடாத உயிர்மெய்கள் ஙு, ணு, நு ஆகிய மூன்றுமே. இவற்றையும் ஙா, ணா, னா என்று ஆக்கிக்கொள்வதோடு அக்காலின் துணையை உயிர்க்கும் சேர்த்துக்கொள்ளுங்கள்

உயிருக்கும் கால் (ா): அ, அா, இ, இா, உ, உா, எ, எா, ஒ, ஒா இவ்வாறு சேர்ப்பதால் ஐந்து குறில்களும் காலின் துணையால் ஐந்து நெடில்கள் ஆகின்றன. ஐ, ஔ என்ற இரண்டையும் அய், அவ் என்று எழுதிக்கொள்ளலாம். இது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. விளக்கம் தேவையில்லை. எனவே ஏழு நெட்டெழுத்துகள் குறைகின்றன.

குறிலின் வழி: ஐந்து குற்றெழுத்துகளின் வழியே தான் தமிழ் மொழியின் ஓசையமைப்பும் வரிவடிவும் பெரும்பாலும் இருத்தல் வேண்டும்.

www.thamizham.net - Free E book No 7416

செய்தியும் அறிக்கையும்

செய்தி எண்: உ. த. க. 6/2000

கீழ்க்காணும் நகரங்களிலும் ஊர்களிலும் கிளைக்கழகங்களும் வட்டக்கழகங்களும் அண்மையில் தொடங்கப்பெற்றுச் செயற்பட்டு வருகின்றன. ஆங்காங்குள்ள உண்மைத் தமிழன்பர்கள் விரும்பின், அவற்றில் உறுப்பினராகச் சேர்ந்து, தமிழ்த்தொண்டும், நாட்டுத் தொண்டும் புரிய வேண்டிக்கொள்கிறோம்.

1. முகவை மாவட்டம்:

அ. சாத்தரசன்கோட்டை – கிளைக்கழகம்:- தொடக்கம் 23-5-69 திரு. இரா. மு. இளஞ்செழியன் (தலைவர்) திரு சீ. சுப்புக்கண்ணன் (செயலர்) திரு. மெ. பா. இறையடியான் (பொருளர்)

ஆ. காரையேந்தல் - கிளைக்கழகம்: தொடக்கம் (15 - 6 - 69) திரு. மு. இளஞ்செழியன் (தலைவர்) திரு. வே. இளமுருகன் (செயலர்) திரு. செ வெற்றிவேலன் (பொருளர்.)

இ வான்வாங்கி - கிளைக்கழகம்: தொடக்கம் - இரட்டை - ௫. திரு. இரா. சண்முகவேல் (தலைவர்) திரு. இ. ரா. செ. அரசன் (செயலர்) திரு உ. ச. எழில் (பொருளர்.)

ஈ. திருவாடானை வட்டக்கழகம்: தொடக்கம் – மீனம் உ௩. (6 - 4 - 69) திரு. வீர. சோம.. வீரப்பன் (தலைவர்) திரு. நா, டி. தென்னகவேந்தன் (செயலர்) புலவர் திரு. வ. தமிழ்வளவன் (பொருளர்)

உ. பறம்புக்குடி வட்டக்கழகம்: தொடக்கம் - கும்பம் உக (9 - 3 - 69) தலைவர்: திரு. மு. தமிழ்க்குடிமகன்; செயலர். திரு. பறம்பை அறிவன். பொருளர் : திரு. சி. வேழவேந்தன்.

www.thamizham.net - Free E.book No 7416

உ. கோவை மாவட்டம்:

அ கோவைநகரக்கிளை: தொடக்கம் (தெரியவில்லை) புலவர் திரு. சா. மருதவாணன் (தலைவர்) புலவர். திரு. பொன்முடியான் (செயலர்) திரு: தாரை. கோ. கண்ணையன் (பொருளர்]

௩. தஞ்சை மாவட்டம்:

அ ஆலத்தூர் கிளைக்கழகம்: தொடக்கம் - விடை உ௧ தலைவர்: புலவர் வி. திருப்பதி செயலர்: அர. திருநாவுக்கரசு, பொருளர்: கோ. திருநாவுக்கரசு.

அறிக்கை எண்: உ. தூ. க. 5/2000

அ. கிளைக்கழகங்களுக்கும், மாவட்ட அமைப்பாளர்களுக்கும்..

1. மாத விளத்த அறிக்கைகளைக் கிளைக்கழகங்களும், மாவட்ட வட்ட அமைப்பாளர்களும் குறித்த காலத்தில் விடுப்பதில்லை. பல கிளைக்கழகங்கள் தலைமையக நினைவூட்டு மடல்களைக் கண்ட பின்னரே அறிக்கைகளை விடுக்கின்றன. சில கிளைகள் நினைவூட்டு மடல்களுக்குப் பின்னரும் விடுப்பதில்லை. அவ்வாறு அவை நடந்துகொள்வது கழக இயக்கத்திற்கே பெருந்தடையாக உள்ளது. அவ்வாறின்றி எல்லாக் கிளைக்கழகங்களும், வட்ட, மாவட்டக்கழகத் தலைவர்களும் இனி, ஒவ்வொரு மாதத் தொடக்கத்திலும் கட்டாயம் அறிக்கைகளைத் தவறாமல் விடுத்து வைத்தல்வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

2. இனி, விடுக்கப்பெறும் அறிக்கைகளிலும் ஆங்காங்குள்ள விளக்கங்கள் சரிவரத் தரப்பெறுவதில்லை. உறுப்பினர் பற்றுமுறி எண். உறுப்பினர் பெயர்கள், அகவை. முகவரி முதலிய விளக்கங்கள் சரிவர நிறைவுசெய்யப்பெறாத விளத்த அறிக்கைகளால் பயன் ஏதுமில்லை. அவற்றைக் கேட்டறியும் பொருட்டுத் தலைமைக்கழகம் விடுக்கும் மடல்கள் வழி ஆகும் செலவும் மிகுதியாகின்றது. எனவே அறிக்கைகள் விடுக்கப்பெறுமுன் அவை சரிவர நிறைவு செய்யப் பெற்றுள்ளனவா எனத் தெளிவாக நோட்டமிட்ட பின்பே விடுக்க வேண்டுகின்றோம்.

3. சில மாத விளத்த அறிக்கைகளில் தரப்பெறும் உறுப்பினர் பெயர்களும், அவற்றிற்கான உறுப்பினர் எண்களும் உறுப்பினர் சேர்ப்புப் படிவத்தில் மாறுபடுகின்றன. சில வரிசை எண்கள் தாறுமாறாகவும் பொருத்தமின்றியும் உள்ளன. சிறிதே கவனம் செலுத்

www.thamizham.net - Free E book No 7416

திலுல் அவை பிழையின்றி விடுக்கப்படலாம். கழகத் தலைவர்களும் செயலர்களும் கவனிப்பார்களாக.

4. விடுக்கப்பெறும் உறுப்பினர் சேர்ப்புப் படிவங்கள் ஒவ்வொன்றின் தலைப்பிலும் உறுப்பினர் எண்கள் குறிக்கப்பெறுவதுடன், மாவட்ட அமைப்பாளரின் கையொப்பமும் இடம்பெறுதல் கட்டாயமாகும். அவ்வாறின்றி வரும் சேர்ப்புப் படிவங்கள் திருப்பப் பெறுவதால் தலைமைக் கழகத்திற்கு வீணன் அஞ்சல் செலவு ஏற்படுகின்றது. அமைப்பாளர்கள் இது குறித்துக் கிளைக்கழகத் தலைவர்களுக்குத் தெளிவாக அறிக்கை விடுக்க வேண்டுகின்றேன்.

5. ஒவ்வொரு மாத அறிக்கையிலும் மாதத்தின் பெயர், கிளைக் கழகப் பெயர், ஊர், வட்டம், மாவட்டம் முதலியன தெளிவாகக் குறிக்கப்பெறுதல் வேண்டும்.

6. அமைப்புக்கூட்ட அறிக்கைகள் கிளைக்கழகத் தலைவர் செயலர் முதலியோரின் கையொப்பங்களின்றியே விடுக்கப் பெறுகின்றன. அவ்வாறு வரும் அறிக்கைகள் கவனிக்கப்பெறா. அறிக்கைகளைக் குறித்த காலத்தில் விடுப்பதில்லை. இவற்றை மாவட்ட அமைப்பாளர்கள் கவனித்துத் தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுகின்றேன்.

7. கிளைக்கழகங்கள் எக்காரணம் பற்றியும் தலைமைக்கழக இசைவின்றி நன்கொடை தண்டுவது தடுக்கப்பெற்றுள்ளது. இது குறித்துத் தலைமைக்கழகம் கடுமையான நடவடிக்கை எடுத்து வருகின்றது. நன்கொடை தண்டும் தேவையுள்ள கிளைக்கழகங்கள் செயற்கூட்டத்தில் அவ்வாறு நன்கொடை தண்டவேண்டிய கரணியத்தைக் காட்டிக் குறிப்பிட்ட ஒரு தேவைக்கென நன்கொடை தண்டலாம் என்னும் ஒரு தீர்மானத்தை முதலில் நிறைவேற்றுதல்வேண்டும். இத்தீர்மானத்தின் படியொன்றினை நேரே தலைமைக் கழகத்திற்கும் பிறிதொன்றினை மாவட்ட அமைப்பாளர்க்கும் விடுத்தல் வேண்டும். மாவட்ட அமைப்பாளர்க்கு விடுக்கப்பெறும்படி அவர் தகவுரையுடன் தலைமைக் கழகத்திற்கு விடுக்கப்பெறுதல் வேண்டும். அதன் பின்னரே தலைமைக்கழகம் குறிப்பிட்ட அந்தத் தேவைக்கென நன்கொடை தண்டிக்கொள்ள இசைவுக்கட்டளை விடுக்கும். இவ்வாறு இசைவுபெறாமல் தண்டப்பெறும் நன்கொடைகளைத் தலைமைக்கழகம் தன் வயப்படுத்திக் கொள்ளவேண்டி வரும். எனவே இது குறித்தும் மாவட்ட அமைப்பாளர்கள் தக்க அறிக்கைகளைக் கிளைக்கழகங்கட்கு விடுக்கக் கேட்டுக்கொள்கின்றேன்.

மே/பா. தென்மொழி
கடலூர் ௧.
இரட்டை ௧௬ தி.பி. 2000

பெருஞ்சித்திரன்,
பொதுச்செயலாளர்,
உலகத்தமிழ்க்கழகம்.

www.thamizham.net - Free E book No 7416

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கை எத்துணை விரைவாக இயங்குகின்றது. இந்தியர் விரைவே இத்துணை என்ருல் மேலையர் செலவை எண்ண ஒல்லுமோ? இவ்விரை வோடு நடையிட முடியாமல் நாடி தளர்ந்து வாடிக்கிடக்கும் தமிழினத் தைக் காணும்போதுதான் கண்ணீர் வடிகிறது. ஒரு பார்சிக்காரனும், குசராத்திக்காரனும் எத்துணைச் சிறப்போடு வாழ்கிருர்கள்! இந்திய அளவில் கூடத் தமிழினை எடையிடமுடியாதபோது உலக அரங்கில் தமிழனின் நிலையை நினைத்தும் பார்க்க இயலாது. இந்நிலையில் தாங்கள் ஒருவர்தான் தமிழினத்திற்கு முழுமையான வழிகாட்டிட முன்வந்திருப்பது இறையுருளே முன்வந்திருப்பதுபோல் தெரிகிறது. தாங்கள் எடுத்துவரும் முயற்சி இந்நாள்வரை எவரும் எடுக்காத ஒன்று. தென்மொழியையும் தமிழ்ச்சிட்டையும் தவருமல் வெளியிட்டு வருவீர்கள். புதியதாய் எழுத ஒன்றும் தோன்றவில்லை.

இங்கு என் அன்பு இல்லாள் தென்மொழியைப் படிக்காமல் குடும் பத்தினரைமட்டும் கேட்டு எழுதச்சொல்கிருள். இவளைப்போன்றவளை நம்பித்தான் நாளைய தமிழகம் நடையிட இருக்கிறது. தமிழ்ப் பெண் கள் இன் எழுச்சி பெருதவரை தமிழினத்திற்கு விடுதலையே இராது. தொட்டிலில் தொட்டிலாட்டும் கைகளன்ருே உலகாளும் கைகள். தென் மொழியகத்தில் பணிபுரியும் அனைவர்க்கும் எங்கள் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவியுங்கள்.

—கணியன், பூ.ஞ-6.

ஆரியப்பூதம் அடக்கமெழும்புதல்

பிழைதிருத்தப்பட்டி

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
௩	௪	சமற்கிருதத்திற்கு மட்டுமன்று	திரவிடத்திற்கு மட்டுமன்று, முண்டா மொழிகள் நீங்கலாகச் சமற்கிருதம் உட்பட
[illegible]	௬	௫ - ம்	௫ - ஆம்
[illegible]	௭	கிளை	இளை
[illegible]	௧௧	அலிகேற்ருர்	அலிகேற்றர்
[illegible]	இறுதி	cunulus	cumulus
		cumulute	cumulate
[illegible]	[illegible]	gk	Gk
	௬	வளர்க்தி	வளர்ச்சி
[illegible]	[illegible]	யுணர்ச்சி	வுணர்ச்சி
[illegible]	[illegible]	குற்றமொன்றில்லை	குற்றமொன்றுமில்லை

www.thamizham.net - Free E book No 7416

0 தகைமைசால் ஆசிரியப் பெருந்தகையீர்! மேழும் திங்கள் தென்மொழியின் ஆசிரியவுரை கருத்தாழம் மிக்கது; கருத்துக் குருடர்களுக்கும் அறிவொளி கொளுத்தி அறியாமை இருள்நீக்கும் பெற்றியது. பொருள் நலம் செறிந்தது. சாதி வெறிபிடித்த சழக்கர்களுக்கும், மதப்பித்துக்கொண்ட மதியிலிகளுக்கும் சரியான சாட்டையடி

குமுகாயத்தில் மலிந்துள்ள சீர்கேடுகளை உணர்ந்து எழுதியுள்ளீர்கள். தங்களைப் போன்றவர்கள் இன்று நாட்டில் பெருமளவுக்கு அருகியுள்ளனர். இதுபோலும் சிறந்த ஆசிரிய உரைகளைக்கொண்டு இனிவரும் இளந்தலைமுறையினரை நல்லாற்றுப்படுத்தவேண்டும் என்று அன்புடன் இறைஞ்சுவல்.

— ச. சி. முனிசாமி பெங்களூர் 21.

0 "வாழ்க தமிழ்! வெல்க நம் மொழிப்போர்" தமிழ் முழக்கம் செய்யும் தனிப்பெருந்தலைவா! திருவிட நாட்டின் புகழெலாம் மங்கச் செய்த ஆரியர் - பார்ப்பனர் என்கின்ற வழியிலே பிறந்து வளர்ந்தவன் நான். ஆயினும் பள்ளிநாட்கள் தொடங்கப்பெற்றே நான் சாதி மத வேற்றுமையை என் இல்லத்திலும் வெளியிலும் கடுமையாக எதிர்த்தே வந்திருக்கிறேன். இதுதவிர என் தாய் மொழியாம் தமிழ் மொழியில் மிகுந்த பற்றுடையவனாகவும் இருந்துவந்துள்ளேன். பேராயக் கட்சியினாலும் தமிழகத்திலே தவறிப் பிறந்துவிட்ட கயவர் ஒருசிலராலும் தமிழ் தன்னிடத்தை இழந்து வருவதையும், மொழிவளமற்ற இந்தி இங்கு ஊடுருவல் செய்வதைபுப் கண்டு அதனை வலிவாக எதிர்த்து வருகின்ற பலரில் நானும் ஒருவனாக இருக்கிறேன் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். என்போன்ற பல்லாயிரக்கணக்கான ஆரிய நண்பர்களும், திருவிடத் தோழர்களும "தென்மொழி" கண்டு, பாவாணர் தலைமையில் அமைக்கப்பெற்ற தூய தமிழர்படையில் சேரவேண்டும் என்று மிக இறைஞ்சி வேண்டிக் கொள்கிறேன்

— மாறன் (சிவராமன்) காசாமலை, திருச்சி – 1.

0 தகைமைசால் தண்டமிழ்ப் பெரும தாங்கள் சோர்வுறுவதாக வந்த மடல்களைக்கண்டு மனம் குமுறினேன். தாங்கள் எற்றுக்கும் பின்னடையாதீர். எங்களைப்போல் ஆயிரமாயிரம் தொண்டர்கள் தங்களின் ஒவ்வொரு கட்டளைக்கும் ஆயத்தமாக இருக்கும்போது ஏன் தளர்ச்சி?

— ந. தேவராசன், கலவை (அஞ்சல்) வ. ஆ. (மேழம் எ)

0 தனித்தமிழ்த் தலைவ! வணக்கம். ஐயா, தளர்ந்துவிடாதீர்கள். கடந்த சில 'தென்மொழி' ஆசிரிய உரைகளையும் தங்களுக்கு வந்த மடல்களையும் கண்ணுற்ற எவரும் நீங்கள் சற்றே அயர்ந்துள்ளீர்கள் என்றே எண்ணுவர். அற்றேல் உணர்ச்சிப் பிழம்புச்சொற்கள் 'தமிழின் முனைப்புக்கென முயலும் மனம் தனியே அனல் மெழுகாகிச் சாக வேண்டியதுதான்" என்னும் ஆற்றாமைச் சொற்களாக வடிவெடுத்தமை யாங்கன்? செய்யப்படவேண்டிய வினைப்பாடுகளை விடுத்து "என் இயக்கம்பற்றிய சில விளக்கங்கள்" எழுதவேண்டிய நிலையில் தென்மொழியை நடையிடவைத்த தமிழர்களைப்பற்றியும் அவர்களை

(அடுத்தபக்கம் பார்க்க)

www.thamizham.net - Free E book No 7416

எதிர்நோக்கியுள்ள இருளைப் பற்றியும் யான் கணிக்க வியலாதவன். 'தமிழனின் முனைப்புக்கும் முறிப்புக்குமான வினைகளின் மிகப்பல 'தென்மொழி' யொன்றினாலேயே செய்யமுடியும். உங்களால் சமைக்கப்படும் தமிழர் குமுகாயம் ஆரியப்புரட்டு மனு குப்பைகளைத் தூக்கி குமரிமாக்கடலில் எறிந்துவிட்டுக் குறள்நெறி வாழும் என்பதில் ஐயமில்லை. எனவே அயர்ந்துவிடாதீர்கள்! அயர்ந்துவிடாதீர்கள். அயர்ந்துவிட்டால் மற்றுமொரு பெருஞ்சித்திரன் தோன்றுதல் என்றோ? மற்றொன்று தமிழின் சிறப்பைத் தமிழில் எழுதித் தமிழரே படித்துக்கொண்டுள்ளோம் பிறமொழியாளர் அறிந்திலர். தென்மொழியைப் போன்ற ஆங்கிலத்தாளிகை ஒன்றும் வேண்டும். ஆங்கிலப் புலமைசான்ற தமிழர்கள் ஆங்காங்குள்ள ஆங்கிலத் தாளிகைகட்குத் தமிழ்மொழிச் சிறப்பைப் பற்றிய கட்டுரைகளை எழுதிவிடுத்தல்வேண்டும். ஐயா, இறுதியாகத் தாங்கள் மேற்கொண்ட செலவில் தங்களைப் பின்தொடர்ந்து தம்தம் தனித்தமிழுணர்வென்னும் ஒளிப்பிழம்புகளை ஏந்திக்கொண்டு நடையிடும் தமிழர்கள் ஏராளம்! இலக்கையடையும்வரை நீங்களே முன்னோடியாயிருங்கள்! அயர்ந்துவிடவேண்டா என் உள்ளுணர்விலுறுத்தும் அச்சத்தால் இச்சொல்லைப் பன்முறை எழுதிவிட்டேன்.)

— த. செகந்நாதன், வான்படைப்பாசறை, பிறெய்லி (மீனம் 28)

O பொதுமை உணர்வு செழுமிய கன்னித் தமிழ்ப் புலவ! என் ஆசிரிய வணக்கம் பல. தென்மொழி மாந்தரிடையே கடந்த எட்டாண்டுகளிலும் இப்பொழுதும் செய்த-செய்துகொண்டிருக்கும் ஆக்கப்பணிகளால் அறிவு விளக்கங்களால் என்னையும் இன்னும் எத்தனையோ பெயரையும் அறியாமையினின்று நீக்கி அறிவு ஒளி ஊட்டி வருகின்றது. அதனுடைய பணிக்கு இடையூறுகள் வரக்கூடாது வளர்ந்து தொடர்ந்து பெருகட்டும். உங்கள் வழி நின்று தமிழர்கள் நல்வாழ்வை, விடுதலையைப்பெற்றுப் பழைய பெருமையை மறவரலாற்றைப் பெறவேண்டும் என்பதே எனக்கும் எல்லாருக்கும் வேணவா. தென்மொழியின் வளர்ச்சி தமிழரின் வளர்ச்சி தமிழர்க்கு ஏற்றம்.; தமிழ் நாட்டுக்கு விடுதலை.

— கு. இராசகோபாலன், தேவக்கோட்டை

() ஏரார்ந்த உள்ளத்தொடும், நேரார்ந்த பார்வையோடும், சீரார்ந்த பணியை ஏற்றுக்கொண்டுள்ள நீங்கள் இன்றுள்ள நிலையையும் தமிழர் நினைப்பையும் அறிந்து அவர்களின் குறியினையும் கொள்கையினையும் தெளிவு படுத்திப் பார்வையிற் செம்மைசெய்து பழக்கத்தில் தூய்மை வளர்ந்து நன்னிலைக்குத் தமிழ்க் குமுகாயத்தை ஆரவாரமில்லா அறிவியல் உலகுக்கு அழைத்துச் செல்கிறீர்கள். என்றும் துணைநிற்போம்! தமிழுள்ளவரை தங்கள் புகழ் நிற்கும். என் உயிர் உள்ளவரை உங்கள் உண்மைவழி நிற்பேன். உண்மை வழிநின்று தெளிவாக விளக்கமான பாதையில் நடையிடுகிறீர்கள். தங்கள் வெற்றி தமிழின் வெற்றி, தமிழர் வெற்றி.

— இள. அரங்கசாமி, இராவத்தூர், கோவை

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1

www.thamizham.net - Free E book No 7416